Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

UNION
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-008)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 26 திங்கட்கிழமை (10.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 235

## 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

அடுத்த சில மாதங்களில் மேலும் 15 ஆயிரம் பட்டதாரிகள் ஆசிரியர்களாக தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் நிய மிக்கப்படவுள்ளனர். கோவிட் - 19 நிலைமை மற் றும் பொதுத் தேர்தல் காரணமாக கடந்த சில 23

## மாவை சேனாதிராஜாவுக்கே தேசியப் பட்டியல் ஆசனம்

### த.அ.கட்சி யாழ். கிளை தீர்மானம்

(குப்பிழான்)

2020 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புக்கு கிடைத்த தேசியப் பட்டியலை இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கே வழங்க வேண்டுமென தமிழ ரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளை தீர் 23

## 19ஆவது திருத்தத்தை ஒழிக்க எந்த ஒத்துழைப்பையும் வழங்க மாட்டோம்

### சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

*(கொழும்பு)*

19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை ஒழிப்பதற்கு நாம் ஒருபோதும் அரசுக்கு ஆத ரவு வழங்க மாட்டோம் எனவும் நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் புதிய திருத்தங் கள் எதுவும் கொண்டுவரப்பட்டால் அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக வும் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

*(23ஆம் பக்கம் பார்க்க)*



## புன்னாலைக்கட்டுவனில் வாழைக்குலை திருடன் மடக்கிப் பிடிப்பு

(குப்பிழான்)

தோட்ட நிலத்தில் பகலில் வெட்டிய வாழைக்குலைகளை இரவு வேளையில் எடுத்துச் செல்ல வந்த திருடன் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக் கப் பட்டுச் சுன்னாகம் பொலிஸாரி டம் ஒப்படைக்கப்பட் டுள்ளான். 24

## சஜித்திடமிருந்து மொட்டுக் கட்சிக்கு தாவ தயாராகும் 10 பேர்

(கொழும்பு)

எதிர்க் கட்சியில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 10 உறுப் பினர்கள் புதிய அரசாங்கத் துடன் இணைய முடிவு செய் துள்ளதாக தெரிவிக்கப்படுகி றது.

இது தொடர்பில் 23

## தேசியப்பட்டியல் ஆசனத் தெரிவு தன்னிச்சையாக எடுக்கப்பட்டுள்ளது

### ரெலோ, புளொட் கடும் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு கிடைத்துள்ள தேசியப் பட்டி யல் ஆசன பிரதிநிதி தன்னிச்சை யாக தெரிவு செய்யப்பட் டுள்ளதாக பங்காளிக் 23

## 4 ஆவது தடவையாக பிரதமராக மகிந்த நேற்று பதவியேற்பு



03

## கொள்ளையுடன் தொடர்புடைய இருவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி மற்றும் கொடி காமம் பகுதிகளில் பாரிய கொள்ளைச் 23

## பாடசாலைகள் மீண்டும் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து பாட சாலைகளும் இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித் துள்ளது. 23

## எங்கோ இருந்தவர்கள் வந்து மக்களுக்கு சலுகைகளைக் கொடுத்து வென்றுள்ளனர்

### நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சாடல்

(யாழ்ப்பாணம்)

சலுகையா? உரிமையா? என்ற போராட்டத்தில் இப்பொழுது நாம் சலுகைக்கு இடமளித்து விட் டோம். எங்கோ இருந்தவர்கள் வந்து இரவிரவாக மக்களுக்கு சலுகைகளைக் கொடு த்து இன்று மக்களால் 23

## புதிய அமைச்சரவை 14ஆம் திகதி பதவிப் பிரமாணம்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை எதிர் வரும் 14 ஆம் திகதி 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## திருமதி மாலினி பாஸ்கரன்

(மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் – முல்லைத்தீவு)

பிறப்பு 04.01.1967 இறப்பு 09.08.2020

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் இல.50, அரசடி வீதி,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாலினி பாஸ்கரன் அவர்கள் நேற்று (09.08.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஓய்வு பெற்ற அதிபர்)-சோமவதி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், இராஜலிங்கம் ஆகியோரின் பாசமிகு மருமகளும் வேதவதியின் அன்புப் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம்-கனகமணி (இணுவில் மேற்கு) தம்பதியினரின் அன்பு மருமகளும் பாஸ்கரன் ( Wesco Pharmacy ) அவர்களின் பாசமிகு துணைவியாரும் சாலினி, தேவன்இளங்கோ (லண்டன்), கௌரி (வசந்தா), திருமகள் (மீரா), காலஞ்சென்ற சூலபாணி மற்றும் மன்றுளாடி (வவுனியா) ஆகியோரின் அருமை சகோதரியும் பரமேஸ்வரன் (ஓய்வுபெற்ற லிகிதர்), கிருஷ்ணவேணி, கலைவாணி(ஆசிரியை-வ/மூன்று முறிப்பு அ.த.க பாடசாலை), பத்மராணி(ஆசிரியை-யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி (கணக்காளர்) மற்றும் யோகலட்சுமி (லண்டன்), காலஞ்சென்ற சச்சிதானந்தன், தேவிகா (ஆசிரியை-வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), ராஜினி (ஆசிரியை - வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் விசாகியின் பாசமிகு சித்தியும் விஷ்ணுவர்த்தனனின் (Commercial Leasing And Finance-வவுனியா) மாமியும் சாரங்கன், சயந்தினி, அபிரிகா, அபிஷகன், மயுரிகா, லக்ஷிகன் ஆகியோரின் பாசமிகு அத்தையும் கோவேழன், கௌரீசன், ஏரகன், தரசுதா, ஜனரஞ்சனி, திருவேணி, அபிவர்ஷினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2020) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.50, அரசடி வீதி , யாழ்ப்பாணம்.
021 221 9011
075 046 8921
தகவல்: குடும்பத்தினர்

# தமிழரசுக் கட்சியின் வீழ்ச்சிக்கு சுமந்திரனே காரணம்

## த.அ.கட்சியின் கொழும்பு கிளை துணைத் தலைவி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழரசுக்கட்சி இப்போது வீழ்ச்சியான நிலையில் உள்ளது. கட்சியின் தலைவரே அதனை மறுசீரமைக்க வேண்டும். இதனால் தேசியப்பட்டியல் ஆசனம் மாவை சேனாதிராஜாவுக்கே வழங்கப்பட வேண்டும் என தமிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டத்தின் துணைத் தலைவி மிதிலை ஸ்ரீ பத்மநாதன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சியின் வாக்குகளின் வீழ்ச்சிக்கும் வேட்பாளர்களின் தோல்விக்கும் மிக முக்கியமான காரணம் எம்.ஏ. சுமந்திரன் தான் என்பதே வெளிப்படையான உண்மை. தமிழரசுக் கட்சியை உடைப்பதற்கான எல்லா செயற்பாடுகளும் இவராலேயே செய்யப்பட்டது.

ஏற்கனவே பலர் கட்சிகளிலிருந்து வெளியேறிவிட்டார்கள். இனியும் இவ்வாறான தோல்விகள் ஏற்பட்டால் இன்னும் அதிகமானவர்கள் வெளியேறக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படலாம்.

நாம் இப்போது கட்சியை மறுசீரமைக்க வேண்டும் எனும் கட்டாயத்தில் இருக்கிறோம். எமது கட்சியை வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுக்கும் பொறுப்பு கட்சியின் தலைவருக்கே உள்ளது. அதனால் தேசியப் பட்டியல் ஆசனம் அவருக்கே வழங்கப்பட வேண்டும். கட்சியின் வெற்றியை மீட்டெடுப்பதில் அவரின் அனுபவம் நிச்சயமாக எமக்குத் தேவைப்படும்.

தமிழரசுக்கட்சி மாத்திரமல்ல தமிழர்களும் வெவ்வேறாக பிரிந்திருப்பதற்கு காரணம் எம்.ஏ.சுமந்திரன் தான் என்பது என்னுடைய கணிப்பு.

மாவை சேனாதிராஜா அண்மையில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது திட்டமிட்டு பின்தள்ளப்பட்டார். திரு .எம்.ஏ.சுமந்திரனை கட்சியிலிருந்து விரட்டினால் தமிழரசுக் கட்சியை புனரமைக்க முடியும்.

அவ்வாறு நடைபெற்றால் எல்லாத் தமிழ் கட்சிகளும் ஒன்றிணையக் கூடிய வாய்ப்புள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஞா-8)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## ஜயாத்துரை இந்திராணி

தாயின் மடியில் :– 05.08.1950 | காலன் கையில் :– 24.07.2019

திதி - சப்தமி (10.08.2020)

கணப் பொழுதில் எண்ணவில்லை நீங்கள் இமைப்பொழுதில்
எம்மை விட்டு போவீரென நினைக்கவில்லை. அன்புடனும் பண்புடனும்
பாசத்துடனும் வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வமே எங்கள் அம்மா.
நீங்கள் இல்லாத உலகம் என்றும் இருள் மயமானதே.
உங்கள் பிரிவைத் தாங்குமோ எங்கள் இதயம். ஒவ்வொரு நொடியிலும்
இதயம் துடிப்பது போல் உணர்கின்றோம்.

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

(C-012)

" வாரிவட்டம் "
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
077 722 9208
உங்கள் பிரிவால் துயருறும்
கணவர்,பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

# ஆற்றொணாத் துயரோடு ஆண்டு ஒன்றில்...



அமரர்

## கந்தசாமி குமாரசாமி

பிறப்பு 11.09.1931 இறப்பு 24.07.2019

பாசமுற வாழ்ந்து பண்போடு எமையாக்கி
பார்போற்றும் புகழ் பெற்ற அப்பாவே!
ஆசை மொழி இன்றி அன்பு வழி பிரிந்து
ஆண்டொன்றில் வாடுகிறோம் சாந்தி கொள்க.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(3536)

டச் வீதி, மூளாய் குடும்பத்தினர்

# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்



11.07.2020 இறைவனடி சேர்ந்த

அமரர்

## நடராசா கனகம்மா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை 08.08.2020 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. இன்று (10.08.2020) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

கட்டுவன் மேற்கு, தெல்லிப்பளை.
தகவல் :- பிள்ளைகள்

(3503)

# நாட்டின் பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்பு






(கொழும்பு)

நாட்டின் பிரதமராக மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றையதினம் பதவியேற்றார்.

இந்தப் பதவியேற்பு நிகழ்வில் சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகள் மற்றும் ஏனைய முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிறைவடைந்த பொதுத்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ 5 இலட்சத்து 27 ஆயிரத்து 364 விருப்பு வாக்குகளை பெற்றிருந்தார். இலங்கை வரலாற்றில் வேட்பாளர் ஒருவர் பெற்றுக்கொண்ட அதிக விருப்பு வாக்குகளாக இது பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# குணமடைந்தோர் 2576



(கொழும்பு)

கொரோனா தொற்றில் இருந்து மேலும் 3 பேர் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளதாக தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பூரண குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 576 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மொத்த பாதிப்பு இரண்டாயிரத்து 841ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை 251 வைரஸ் தொற்றாளர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்தோடு கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி இலங்கையில் இதுவரையில் 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மக்களுக்கு மீண்டும் சேவை செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்

## பதவியேற்றபின் பிரதமர்

(கொழும்பு)

**என் மக்களுக்கு மீண்டும் சேவை செய்ய எனக்கு கிடைத்த வாய்ப்பினால் மகிழ்ச்சியடைவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



நேற்றுக் காலை ஜனாதிபதி கோட்டாபய முன்னிலையில் களனி ரஜமகா விகாரையில் பிரதமராக மீண்டும் பதவியேற்ற பின்னர், அது தொடர்பில் தனது டுவிட்டரில் பதவிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த பதிவில் மேலும் தெரிவித்த அவர்,

என் மக்களுக்கு மீண்டும் சேவை செய்ய எனக்கு கிடைத்த வாய்ப்பால் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

இலங்கையர்கள் எனக்குக் கொடுக்கும் நம்பிக்கை, எனது தேசத்திற்கு தொடர்ந்து சேவை செய்யத் தூண்டுகிறது.

அத்துடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடனான எங்கள் ஆட்சிக் காலத்தில் இலங்கை முற்போக்கான பயணத்தை மேற்கொள்ளும் என்பதை நான் உறுதி செய்வேன் என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# மகிந்த தரப்பின் வெற்றி தனித் தமிழீழ சிந்தனையை முற்றாக ஒழிக்கும்

## நெஸ்பி தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தல் 2020 முடிவுகளானது இலங்கையில் இதுவரை ஏற்பட்டிருக்காத கடலளவு மாற்றம் என பிரித்தானியாவின் கொன்செர்வேட்டிவ் கட்சியின் பிரபு லோர்ட் நெஸ்பி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் ஆதரவாளர்களில் ஒருவரான நெஸ்பி, குறித்த மாற்றத்தினை அங்கீகரிக்கும் நபர்களில் ஒருவராக தான் இருக்கும் அதேவேளை பிரித்தானிய அரசாங்கம் மற்றும் பிரித்தானியாவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் வாழும் புலம்பெயர் சமூகங்களும் இதனை அங்கீகரிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர், 'இது உண்மையிலேயே சுட்டிக்காட்டத்தக்க தேர்தல் முடிவு.

உலகில் வேறெங்கும் காண முடியாத அளவில் இலங்கையின் சாதாரண பிரஜைகள் மீண்டும் வாக்களித்துள்ளனர்.

இதுவே உண்மையான செயற்படக்கூடிய ஜனநாயகம். இந்த முடிவுகளானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன வரலாற்றில் இணைக்கப்பட்டமையினை புலப்படுத்துவதுடன் குறித்த இடங்களுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை ஆளும் கட்சியாகவும் சஜித் பிரேமதாஸ எனும் இளம் தலைவரை கொண்ட சிறிய எதிர்க் கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தியையும் அமர்த்தியிருக்கிறது.

இது இலங்கைக்கான புதிய விடியல். இந்த வாய்ப்பானது இலங்கையை ஒன்றிணைக்கக் கூடிய ஓர் யுகத்தினை உருவாக்குவதுடன் தனித் தமிழீழம் எனும் பிரிவினைவாத சிந்தனையை முற்றாக ஒழிக்கும்' என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# சிறிகொத்தாவை ஒப்படைக்காவிட்டால் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும்

## வடிவேல் சுரேஷ் எச்சரிக்கை



(பதுளை)

சிறிகொத்தாவை ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஒப்படைக்க வேண்டும். அத்துடன் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தையும் எமது பொறுப்பில் விடப்படல் வேண்டும்.

தவறின் ஜனநாயக ரீதியிலான பாரிய எதிர் விளைவுகளை ரணில் விக்கிரமசிங்கவும் அவரது குழுவினரும் அனுபவிக்க நேரிடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பதுளை மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவான வடிவேல் சுரேஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆதரவாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் எனது முதல்நிலை வெற்றியை உறுதிப்படுத்திக் கொடுத்த எனது தொப்புள்கொடி உறவுகள் அனைவருக்கும் எனது சிரம் தாழ்த்திய, உணர்வுபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனதும் அண்ணன் அரவிந்தகுமாரினதும் வெற்றிகளைத் தடுப்பதற்கு பல்வேறு வகையில் பேரினவாதிகளை விட எம்மவர்களே பாரிய பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தனர். ஒப்பந்த அடிப்படையில் சுயேச்சைக் குழுக்களை பேரினவாதிகள் களம் இறக்கியிருந்தனர்.

குறிப்பாக எம்மிருவரது வெற்றியைத் தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அம்முயற்சிகள் அனைத்தையும் எனது தொப்புள் கொடி உறவுகள் முறியடித்து, எம்மிருவரையும் முதல் நிலையிலேயே, வெற்றியடைய வைத்தனர்.

அத்துடன், எமக்கு எதிராகச் செயற்பட்ட அனைவரையும் மண்கவ்வச் செய்தார்கள்.

எமது வெற்றியைத் தடுப்பதற்குச் செயற்பட்ட சுயேச்சைக் குழுக்களுக்கு தகுந்த பாடத்தை எமது உறவுகள் புகட்டிவிட்டனர். அக்குழுக்கள் ஏற்பட்ட பாரிய பின்னடைவிலிருந்து அவர்களினால் மீளவே முடியாது. அந்தளவில் எமது மக்களின் செயற்பாடுகள் அமைந்துவிட்டன.

எமது நாட்டின் பிரதான தேசியக் கட்சியொன்றில் சிறுபான்மையினத்தாரின் பெறுமதிமிக்க வாக்குகளினால் முதல் நிலையில் தமிழர்கள் இருவருமே வெற்றிபெற, எம்மக்கள் பூரண பங்களிப்புக்களை வழங்கினர்.

ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியையும் நாட்டு மக்கள் அனைவருமே புறக்கணித்து விட்டனர். இதற்குப் பின்பும் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது குழுவினரால், எம்மை ஆட்டிப் படைக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கிடைக்கவுள்ள சிறப்புரிமைகள்

(கொழும்பு)

**நாட்டின் 9 ஆவது பாராளுமன்றத்திற்கு கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் 196 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாறு மக்களால் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு பல சிறப்புரிமைகள் வழங்கப்படவுள்ளன.**

இதனடிப்படையில், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 54 ஆயிரத்து 285 ரூபாய் சம்பளம் வழங்கப்படும். பிரதியமைச்சர் ஒருவருக்கு 63 ஆயிரத்து 500 ரூபாவும் ராஜாங்க அமைச்சர் மற்றும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்கு 65 ஆயிரம் ரூபாவும் சம்பளமாக வழங்கப்படும். அத்துடன் சபாநாயகருக்கு 68 ஆயிரத்து 500 ரூபாவும் பிரதமருக்கு 71 ஆயிரத்து 500 ரூபாவும் சம்பளமாக வழங்கப்படும்.

இதனை தவிர பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலக கொடுப்பனவாக ஒரு லட்சம் ரூபாய், போக்குவரத்து கொடுப்பனவாக 10 ஆயிரம் ரூபாய், தொலைபேசி கொடுப்பனவாக 50 ஆயிரம் ரூபாய், அலுவலகம் மற்றும் செல்போன் கொடுப்பனவாக 50 ஆயிரம் ரூபாய் அஞ்சல் கொடுப்பனவாக 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய், சாரதி மற்றும் விருந்து கொடுப்பனவாக 4 ஆயிரத்து 500 ரூபாய் என்பவற்றுடன் பாராளுமன்ற கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக நாள் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்படும்.

பாராளுமன்ற கூட்டங்கள் நடைபெறாத நாட்களில் தெரிவுக்குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக மேலதிகமாக 2 ஆயிரத்து 500 கூடுதலாக வழங்கப்படும். இதனிடையே ஆடம்பர வாகனத்தை கொள்வனவு செய்ய சுங்க தீர்வையற்ற அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.

இவர்கள் 30 லட்சம் முதல் 40 லட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யும் வாகனத்தை இரண்டு கோடியே 590 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும் போன்ற சிறப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. (ஜ-4)

## சர்வதேச விசாரணையை நிராகரித்தார் லெபனான் ஜனாதிபதி



(பெய்ரூட்)

பெய்ரூட் வெடி விபத்து தொடர்பாக சர்வதேச விசாரணை அழைப்புகளை லெபனான் ஜனாதிபதி மைக்கேல் அவுன் நிராகரித்தார்.

லெபனான் தலைநகர் பெய்ரூட் துறைமுகக் கிடங்கில் சுமார் 6 ஆண்டுகளாக வைக்கப்பட்டிருந்த 2 ஆயிரத்து 750 தொன் அமோனியம் நைட்ரேட் வெடித்து சிதறியது.

இந்த வெடி விபத்தில் 150 பேர் பலியாகினர். 4 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். மேலும், இந்த வெடி விபத்தால் சுமார் 3 லட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

பெய்ரூட்டில் ஏற்பட்ட வெடி விபத்து தொடர்பாக ஒளிவு மறைவில்லாமல் சர்வதேச விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று லெபனான் நாட்டின் அரசியல் தலைவர்கள் வலியுறுத்தி வந்தனர்.

அதே போல், லெபனானுக்கு பயணம் மேற்கொண்ட பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனும் சுதந்திரமான விசாரணையை வலியுறுத்தினார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையமும் இதனை வலியுறுத்தியது.

இந்த நிலையில் பெய்ரூட் வெடி விபத்து தொடர்பாக சர்வதேச விசாரணை அழைப்புகளை லெபனான் ஜனாதிபதி மைக்கேல் அவுன் நிராகரித்துள்ளார். (ஜ-4)

## ஒரு ஆசனத்திற்காக தேரர்களிடையே மோதல்

(கொழும்பு)

தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றுக்கு செல்வது யார் என்பது தொடர்பில் கலகொட அத்தே ஞானசாரதேரர் மற்றும் அத்துரலிய ரதன தேரர் இருவரிடையே மோதல் வெடித்துள்ளது.

எமது மக்கள் சக்திக் கட்சியின் கொடி சின்னத்தின் கீழ் இவ்விருவரும் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்ட போதிலும் பாராளுமன்றம் செல்வதற்கு போதுமான வாக்குகள் கட்சிக்கு கிடைக்கவில்லை. ஆனால் வாக்குகளின் அடிப்படையில் ஒரு தேசியப்பட்டியல்



கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேசியப்பட்டியல் ஆசனத்திற்கு தேரர்களிடையே மோதல் வெடித்துள்ளது. (ஜ-4)

## சுகாதாரப் பாதுகாப்பு முறைமைக்கமைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆசனங்கள்

(கொழும்பு)

சுகாதாரப் பாதுகாப்பு முறைமைக்கு அமைய புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆசனங்களை ஒதுக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற பிரதிப் பொதுச் செயலாளர் நீல் இத்தாவால தெரிவித்துள்ளார்.

சமூக இடைவெளியைப் பேணி அதிகளவான சுகாதாரப் பாதுகாப்புடன் அவையில் செயற்படுவதற்கு தேவையான வசதிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இம்முறை பாராளுமன்றத்தில் ஆசனங்களை ஒதுக்கும் போது சுதந்திரக்கட்சியின் பின் வரிசையிலுள்ள இருபது ஆசனங்களை ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்க வேண்டியுள்ளது. அரசாங்கம் 2/3 பெரும்பான்மையை பெற்றுள்ளதனால் ஆளும் கட்சிக்கான ஆசனங்கள் போதாமையே இதற்குக் காரணமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# மர்மநபர்கள் துப்பாக்கிச்சூடு 20 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(புர்கினோ)

புர்கினா பாசோவில் கால்நடை சந்தையில் மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 20 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 50-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினா பாசோவில் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் பயங்கரவாதத் தாக்குதல்கள் பெருகி வருகின்றன.

இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் உயிருக்கு பயந்து அயல் நாடுகளுக்கு அகதிகளாக சென்று உள்ளனர். இந்த நிலையில் அந்த நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள நவுங்கு நகரில் நேற்று முன்தினம் கால்நடைச் சந்தை வழக்கம்போல் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

ஏராளமான மக்கள் கால்நடைகளை வாங்குவதற்காகவும், விற்பதற்காகவும் அங்கு குவிந்திருந்தனர். அவர்கள் அனைவரும் வியாபாரத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த மர்மக் கும்பல் ஒன்று கண் மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதனால் அங்கு பெரும் பதற்றமும் பீதியும் உருவானது. மக்கள் அனைவரும் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அங்கும் இங்குமாக சிதறி ஓடினர்.

ஆனால் அந்த மர்ம கும்பல் சற்றும் ஈவு இரக்கமின்றி அவர்களை விரட்டிச் சென்று குருவி சுடுவது போல சுட்டுத் தள்ளியது.

இந்த கொடூரத்தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உள்பட 20 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

மேலும் 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் (ஜ-4)

# இராசிபலன்

10.08.2020
ஆடி 26, திங்கட்கிழமை
சப்தமி முழுவதும்
அச்சுவினி முன்னிரவு 9.56 மணிவரை
சுபநேரம் 12.04 - 1.34 மணிவரை
இராகுகாலம் 7.34 - 9.04 மணிவரை
சந்திராஷ்டமம்- உத்தரம், அத்தம்

வளவன்


**மேஷம்**
கனவு பலிதமுண்டு, எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கும், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.


**ரிஷபம்**
பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், சேமிப்பு சிறிது கரையலாம், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், சயன சுகக் குறைவுகள் ஏற் படலாம்.


**மிதுனம்**
இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உரு வாகும், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட் டுக்கள் கிடைக்கும், செய்தொழிலில் மேன்மை யும் உயர்வும் கிடைக்கும்.


**சிம்மம்**
வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டு வீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள்,வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பேச்சில் இனிமை தென்படும்.


**கன்னி**
குடும்பப் பெரியவர்கள் உங்கள் செயற்பாடு களில் குறைகண்டு கூறலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமத மாகலாம்.


**துலாம்**
குடும்பத்தினரிடையே அந்நியோனியம் அதிக ரிக்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் முன்னே ற்றம் உண்டு, வருமானம் திருப்தி தரும் வகை யில் அமையும்.


**விருச்சிகம்**
மனக்குழப்பம் அகலும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், செய்தொழிலில் மேன் மையுண்டு, புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.


**தனுசு**
நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், பொதுக் காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


**மகரம்**
பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப செய்திகள் வந்து சேரலாம்.



**கும்பம்**
முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


**மீனம்**
எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், சுபகாரிய பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதி யைக் கொடுக்கும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

ஆசைப்படு! ஆனால் ஆசைக்கு அடிமையாகி விடாதே.

## புதிய அமைச்சரவை

# தலதா மாளிகையில் பதவிப்பிரமாணம்



(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை எதிர்வரும் 14 ஆம் திகதி பதவிப்பிர மாணம் செய்யவுள்ளதாக பிரதமரின் ஊடகச் செயலாளர் விஜயாநந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வு வரலாற்று சிறப்புமிக்க கண்டி புனித தலதா மாளிகையின் பூமி யில் இடம்பெறவுள்ளது.

மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அரச தலைவர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளன்ர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


# 7ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.

## அருணாசலம் தவராஜா

பிறப்பு 21.12.1939
இறப்பு 10.08.2013

அன்பின் சிகரமே அப்பா!
நீங்கள் இறைவன் திருவடியில்
இளைப்பாறுங்கள்
உங்கள் நினைவுகளை
எங்கள் இதயத்தில் நிறைத்து
வாழ்கின்றோம் நாம்...

"ராஜாஸ் வாசம்"
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
(3528)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## முத்துக்குமாரசாமி இராஜேந்திரன்



மேதேஸ்லேன் மானிப்பாயை பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரசாமி இராஜே ந்திரன் அவர்கள் 08.08.2020 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான முத்துக்குமாரசாமி- தங்கரத் தினம் தம்பதியினரின் அன்பு மக னும் நேசமலரின் அன்புக் கணவரும் அசோபனன், சனந்திரன் ஆகியோ ரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்றவர்களான பாலேந்திரன் Dr.சீதாதேவி மற்றும் மகேந்திரன் ஆகியோரின் சகோதரனும் மனோ, prof- கோபாலப்பிள்ளை மகாதேவன், ஞானாம்பாள் (podimanika-expired) ஆகியோரின் மச்சானும் சங்கி, சிவி, குமார், சுவர்ணலதா, சுகு மார், உமா, உலா, உசா, லவண், பிரதாபன், றூபன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.08.2020 இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மேதேஸ் லேன்,
மானிப்பாய்.

தகவல்:-
குடும்பத்தினர்

# யானையை சஜித்திற்கு வழங்கி இணைந்து செயற்பட முன்வாருங்கள்- ஹர்ஷன அழைப்பு

(கொழும்பு)

**பழமைவாய்ந்த கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை இல்லாதொழிக்க முயற்சிக்காமல், மக்கள் வழங்கியுள்ள ஆணைக்கு மதிப்பளித்து அதன் தலைமைப் பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு பெற்றுக்கொடுக்குமாறு தெரிவித்த பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள ஹர்ஷன ராஜகருணா, தங்களுடன் இணைந்து பயணிக்குமாறு ஐ.தே.கவினருக்கு அழைப்பு விடுத்தார்.**



நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கி கடந்து சென்றுள்ள ஓரிரு மாதங்களுக்குள் மக்கள் வழங்கியுள்ள ஆணையை நாங்கள் வரவேற்பதுடன், அதற்கு அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவின் மீதும், எங்கள் மீதும் நம்பிக்கை கொண்டு மக்கள் எமக்கு ஆதரவை வழங்கியுள்ளனர். 54 உறுப்புரிமைகளை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

இவர்களுக்காக நாங்கள் முன்னின்று செயற்படுவோம்.

ஐக்கிய தேசியக் கட்சியுடனான எங்களது தொடர்பில் பலரும் வினவி வருகின்றனர். ஐ.தே.கவுக்கு மக்கள் அவர்களது தீர்மானத்தை பொதுத் தேர்தல் ஊடாக தெரிவித்திருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மீது பற்றுக் கொண்டவன் என்ற வகையில் எம்முடன் இணைந்து செயற்படுமாறு நான் அவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

ஐ.தே.கவின் தலைமை பொறுப்பை சஜித் பிரேமதாஸவுக்கு பெற்றுக் கொடுத்து அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். ஐ.தே.கவின் தலைமைத்துவத்திற்கு சஜித்தே பொறுப்பானவர்.

அதனை மக்களும் உறுதி செய்துள்ளனர் என அவர் தெரிவித்தார். (ஐ-4)

## சந்தையில் மின்சாரமின்மையால் பொதுமக்கள் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

நவாலி மத்திய சந்தையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட மின்னொழுக்கு காரணமாக குறித்த சந்தைத் தொகுதிக்கான முழு மின்னிணைப்பும் துண்டிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்று 2 வாரங்களாகியும் இதுவரை மின்னிணைப்பு மீள்திருத்தம் செய்யப்படவில்லை என பொது மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இதனால் சந்தைக்கு வரும் பொதுமக்கள் தொடக்கம் வர்த்தகர்கள் வரை அனைவரும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். யாழ். குடாநாட்டிலே இடைக்கிடை மழையுடனான கால நிலை நிலவுகின்ற சந்தர்ப்பத்தில் மின்சாரமின்மையால் பெரும் சிக்கல்களை எதிர்கொள்வதாக வர்த்தகர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். அத்துடன் குறித்த சந்தைத் தொகுதியிலுள்ள நீர்த் தாங்கிக்கான மூடி இதுவரையில் பொருத்தப்படவில்லை. இச் சந்தைத் தொகுதி கடந்த 5 மாதங்களுக்கு முன்னதாகவே புதிதாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-8)



காங்கேசன்துறை நல்லினக்க மத்திய நிலையத்திற்கு சிறுவர்களை இணைக்கும் செயற்பாடு கடந்த வியாழக்கிழமை யாழ்.பாதுகாப்பு படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தலைமையில் ஆரம்பமானது. இதில் தெல்லிப்பழை பிரதேசசெயலாளர் மற்றும் கட்டளைத் தளபதி, இராணுவ உயரதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். காலத்தின் தேவை கருதி சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.

## விசேட அபிஷேகம்

(குப்பிழான்)

மல்லாகம் பழம்பதி பிள்ளையார் ஆலயத்தின் இவ்வருட மஹோற்சவப் பெருவிழா நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் மஹோற்சவ காலப்பகுதியான பத்து நாட்களும் தினமும் காலை விசேட அபிஷேகமும் தொடர்ந்து விநாயகப் பெருமான் உள்வீதி உலாவும் இடம்பெறும்.

விசேட அபிஷேகம் தினமும் காலை 10.30 மணியளவில் ஆரம்பமாகுமென ஆலய ஆதீன கர்த்தா தெரிவித்துள்ளார். (4-5-18)



காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் மாணிக்கவாசகர் குருபூஜை நிகழ்வை அண்மையில் நடத்தியது. அதில் சிதம்பரஜோதி தமிழருவி காரை த.சிவகுமார் சொற்பொழிவையும் நுண்கலைமாணி ஆனந்தகிருஷ்னன் ஸ்ரீகாந் நாட்டிய நிகழ்வையும் நிகழ்த்தினார்.

## இருவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

விடத்தற்பளை தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் 126 பேருக்கு நடத்தப்பட்ட கொரோனாப் பரிசோதனையில் 2 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (5-8)

# உலகை உலுக்கும் கொரோனா!

## உயிரிழப்பு 7 இலட்சத்து 28 ஆயிரத்தைக் கடந்தது

(ஜெனீவா)


**உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 7 இலட்சத்து 28 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.**

சீனாவின் வுகான் நகரில் கடந்த ஆண்டு இறுதியில் கொரோனா வைரஸ் கண்டு பிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 215 நாடுகளுக்கு மேல் பரவியுள்ள இந்த வைரஸ் பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 7 இலட்சத்து 28 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

உலகம்முழுவதும்கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை ஒரு கோடியே 97 இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

கொரோனாவுக்கு சிகிச்சை பெறுபவர்களில் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கொரோனா வைரஸ் தாக்குதலில் சிக்கி மீண்டவர்கள் எண்ணிக்கை ஒரு கோடியே 27 இலட்சத்தை கடந்துள்ளது. (ஜ-4)



## உலகப் பழங்குடிகள் தினம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

உலகப் பழங்குடிகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி அனுஷ்டிக்க ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் 1994 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முன்மொழியப்பட்டு 2007 செப்டெம்பர் 13 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.



தொல் பழங்குடிகளான குறிஞ்சி நிலத்தின் குன்றகுறவர்களின் உரிமைகளை ஊக்குவிக்கவும் அவ்வுரிமைகளைப் பாதுகாக்கவும் இத்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந் நிகழ்வானது அப் பழங்குடி குறவர் மக்கள் சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்ற உலக பிரச்சினைகளின் எடுக்கும் நல்லெண்ண முடிவுகளுக்கு அங்கீகாரமாகப் பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் நாட்டில் தற்போது தேர்தல் இடம் பெற்றதன் காரணமாக உலக பழங்குடிகள் தினத்தை எதிர் வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக பழங்குடி தலைவர் ஊருவரிகே வன்னிலைத்தன் தெரிவித்துள்ளார்.

குறித்த தினத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக செயற்படுமாறும் அவர் இதன்போது கேட்டுக்கொண்டுள்ளார். (ஜ-4)

## இந்தியாவை அச்சுறுத்தும் கொரோனா ஒரேநாளில் 816 பேர் உயிரிழப்பு

(டில்லி)

இந்தியாவில் 64 ஆயிரத்து 399 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 861 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவில் தினந்தோறும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தை தாண்டிய வண்ணம் உள்ளது. அது தற்போது 60 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

மகாராஷ்டிரா, ஆந்திரா, தெலுங்கானா போன்ற மாநிலங்களில் தற்போது கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது. இதனால் நேற்று முன்தினம் மாத்திரம் இந்தியாவில் 64 ஆயிரத்து 399 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளையில் 861 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுவரை 2,153,011 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 1,480, 885 பேர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ள நிலையில், 628,747 பேர் சிகிச்சை பெற்று வருகிறார் கள். 43,379 பேர் உயிரிழந்துள்ளனர். (ஜ-4)

## கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசி விவகாரத்தை கவனிக்க தனி குழு


### மத்திய அரசு நடவடிக்கை

(டில்லி)

கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசியை கண்டுபிடிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், தடுப்பூசி விவகாரத்தை கவனிக்க தனி குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

நிடி ஆயோக் அமைப்பைச் சேர்ந்த, வைத்தியர் வி.கே.பால் தலைமையில், இந்த சிறப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

சரியான தடுப்பூசியை இறுதி செய்வது, அதை வாங்குவது, அதற்கான நிதியை ஒதுக்குவது, அதனை இந்தியாவுக்கு கொண்டு வருவது, பாதுகாத்து வைத்திருப்பது, மக்களுக்கு செலுத்துவது வரையிலான அனைத்தையும் இந்தக் குழு கவனிக்கவுள்ளது.




இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள மத்திய அரசின் உயரதிகாரிகள், தடுப்பூசி தொடர்பாக, நிதி ஒதுக்கீடு செய்வது முதல், அது மக்களுக்கு சென்றடைவது வரையிலான அனைத்து விடயங்களையும் கவனிக்கும் வகையில் சிறப்பு குழு அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

உலகெங்கும் 200 வகையான தடுப்பூசிகள் பரிசோதனை நிலையில் உள்ளன. அதில், இந்தியாவில் நடந்து வரும் ஆராய்ச்சிகள் இரண்டாம் நிலையை எட்டியுள்ளன.

மனிதர்களுக்கு பரிசோதனை செய்யும் இரண்டாம் கட்டப் பரிசோதனை நடந்து வருகிறது.

'சைடஸ் கெடிலா ஹெல்த் கேர்' நிறுவனம் மற்றும் 'பாரத் பயோடெக்' ஆகியவை உருவாக்கியுள்ள தடுப்பூசிகள், மனிதர்களுக்கு செலுத்தும் பரிசோதனையின் இரண்டாம் கட்டத்தில் உள்ளன. (ஜ-4)


## இந்து, பௌத்த கலாச்சார பேரவை

- இந்து, பௌத்த கலாச்சார பேரவையினால் நடாத்தப்படும் 2ஆம் மொழி கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. இக் கற்கை நெறியானது ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி முதல் வகுப்புக்கள் வார நாட்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் G.C.E A/L சித்தியடைந்தவர்கள் மற்றும் ஆசிரியர் தொழிலுக்கு ஆர்வம் உடையவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். இப் பாடவிதானம் 600 மணித்தியாலங்களுக்கான 06 மாத காலப் பயிற்சியும் வழங்கப்படும்.
- 120 மணித்தியாலத்திற்கான சிங்கள மற்றும் ஆங்கிலம் ஆகிய பாட கற்கை நெறியானது ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி முதல் கீழ்க்காணும் பாடசாலைகளில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆர்வமுடையவர்கள் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இப்பாடசாலைகளில் காலை 9.00-3.00 வரை விண்ணப்பிக்கலாம் கற்பித்தல் இலவசம்.

01. கொக்குவில் இந்துக் கல்லூரி.
02. கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
03. மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி
04. சாவகச்சேரி டிறிபேட் கல்லூரி
05. நெல்லியடி மத்திய கல்லூரி
06. புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி
07. சுழிபுரம் விக்டோரியா கல்லூரி
08. சண்டிலிப்பாய் மத்திய கல்லூரி
09. வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி
10. உடுத்துறை மகா வித்தியாலயம்

காமராஜர் உயர்கலை கல்லூரி,
பருத்தித்துறை வீதி, ஆரிய குளம்,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு
0772711181

(3535)

# வீட்டுத்திட்ட மீதிக் கொடுப்பனவுகளை பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டு வீட்டுத் திட்டப்பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கொடுப்பனவுகளை முழுமையாக வழங்காமையால் வீடுகளை கட்டி முடிக்காத நிலையில் தொடர்ந்தும் தற்காலிக வீடுகளில் வாழும் அவல நிலை தொடர்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, வெலிஓயா ஆகிய ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வீட்டுத்திட்டங்கள் எவையும் கிடைக்காத நிலையில் காணப்பட்ட குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு கடந்த ஆண்டில் அவர்களுக்கான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டன.

வீட்டுத்திட்டங்களுக்கான பகுதிக் கொடுப்பனவுகளில் முதற்கட்ட மற்றும் இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் மாத்திரமே வழங்கப்பட்டு கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் வீட்டுத் திட்டங்களுக்கான மிகுதிக்கொடுப்பனவுகள் வழங்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.


தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுத்திட்டங்களை பெற்றுக்கொண்ட 2211 குடும்பங்கள் சுமார் ஒருவருடத்திற்கு மேலாக தமது வீடுகளை கட்டி முடிக்கமுடியாத நிலையில் உள்ளனர்.

அடுத்து வருகின்ற மாதங்கள் மழை காலமாக காணப்படுவதால் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக தற்காலிக வீடுகளில் வாழும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ் விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-5-315)

# புகையிரதம் மோதி யானை உயிரிழப்பு

## புகையிரதம் தடம்புரள்வு



(நெளுக்குளம்)

வவுனியா கனகராயன் குளம் பகுதியில் புகையிரதத்துடன் மோதி யானை ஒன்று உயிரிழந்ததுடன், புகையிரதமும் தடம்புரண்டுள்ளது.

குறித்த சம்பவம் கனகராயன்குளம் ஆலங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

யாழில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதம் கனகராயன்குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்த போது பாதையில் நின்றிருந்த யானையுடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

விபத்தில் யானை சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளதுடன், புகையிரதம் பாதையைவிட்டு விலகி தடம்புரண்டது. எனினும் அதிர்ஷ்டவசமாக பயணிகளிற்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை.

சம்பவ இடத்திற்கு சென்ற கனகராயன்குளம் பொலிஸார் மற்றும், வனஜீவராசிகள் திணைக்களத்தினர் விபத்து தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விபத்து காரணமாக பல மணிநேர தாமதத்திற்கு பின்னரே புகையிரதம் தனது பயணத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5-299-250)

# கைதிகளைப் பார்வையிட வாய்ப்பு?

(கொழும்பு)

சிறைச்சாலையில் உள்ள கைதிகளை பார்வையிடுவதற்கு மீண்டும் வாய்ப்பு வழங்குவது தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் அவதானம் செலுத்தி வருகிறது.

சுகாதார பரிந்துரைகளைப் பின்பற்றி கைதிகளை பார்வையிட அனுமதிக்கலாமா என்பது குறித்து இன்று இறுதி முடிவு எடுக்கப்படும் என்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் சிறைச்சாலைகள் மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களின் பரிந்துரைகளும் ஆலோசனைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் கொவிட்-19 தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் உள்ள கைதிகளை வெளியாட்கள் பார்வையிடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்று நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்குப் பின்னரே புதிய முறைமைகளை செயற்படுத்த எண்ணியுள்ளதாகவும் குறித்த அதிகாரி தெரிவித்துள்ளார். (ஜ-4)

# கசிப்புடன் இருவர் கைது



(தருமபுரம்)

நேற்று தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சம்புக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் மாயவனூர்காட்டுப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவரும் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரிடமிருந்தும் 42 லீற்றர் கசிப்பும் கசிப்பு உற்பத்திக்குப யன் படுத்தும் உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் இவர்கள் இருவரும்பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என தருமபுரம் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சிசெர தெரிவித்தார். (4-5-316)

# பிரேசிலில் ஒரு இலட்சம் பேர் உயிரிழப்பு

## பலூன்களை வானில் பறக்கவிட்டு அஞ்சலி



(ரியோடிஜெனிரோ)

பிரேசில்கொரோனாவைரஸ் தொற்றினால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் ஒரு இலட்சத்தினை கடந்துள்ளது.

இந்நிலையில் குறித்த வைரஸ் தொற்றினால் உயிரிழுந்தவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் சிவப்பு நிற பலூன்கள் வானில் பறக்க விடப்பட்டன.

ரியோ டி ஜெனிரோவிலுள்ள Copaca bana கடற்கரையில் அரசு சாரா அமைப்பின் சார்பில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதாவது கடற்கரை பகுதி முழுவதும் சிவப்பு நிற பலூன்கள்மணலில் நடப்பட்டிருந்த சிலுவையில் கட்டப்பட்டிருந்தன. பின்னர் கொரோனாவால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு ஒரே நேரத்தில் ஆயிரம் பலூன்கள் வானில் பறக்க விடப்பட்டன. பிரேசிலில் கொரோனாவால் இதுவரை 29 இலட்சத்து 62 ஆயிரத்து 442 பேர் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஹெரோயினுடன் இரு பெண்கள் கைது


(கொழும்பு)

ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ருகுணு கலா மாவம்ம பகுதியில் 52 வயதானஒரு பெண்ணும், ரத்மலான பகுதியில் 58 வயதான மற்றுமொரு பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து மொத்தமாக **10g 550mg** ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

# குண்டுதுளைக்காத ஆடையுடன் கேகாலையில் ஒருவர் கைது



(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் கைத்துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கேகாலை பகுதியில் வைத்துகைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் அம்பவல-ஹெட்டிமுல்ல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இதே வேளை, குண்டு துளைக்காத ஆடையொன்றை அணிந்திருந்த நபரொருவரும் கேகாலை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் விசேட அதிரடிப் படையின் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ஜ-4)

# காவல் அரண் அகற்றப்பட்டது

(தருமபுரம்)

தருமபுரம் நெத்தலியாறு சித்திவிநாயகர் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு அப்பகுதியில் காணப்பட்ட காவலரண் அகற்றப்பட்டது.

ஆலய நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கமைய மேற்படி அரண் அகற்றப்பட்டது. அவ் இராணுவத்தினர் காவல் அரணை அகற்றினர். (4-5-316)

# அழுத்தங்களுக்கு அச்சமடைந்து இராஜினாமா செய்யவில்லை



## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் தீபிகா உடகம விளக்கம்

(கொழும்பு)

**நான் சுயதீர்மானத்தின் அடிப்படையிலேயே தவிசாளர் பதவிலியிருந்து விலகுகின்றேன். இதில் எவ்விதமான அழுத்தங்களும் கிடையாது. நான் அழுத்தங்களுக்கு அஞ்சி பதவி விலகும் நபர் அல்ல என்று எதிர்வரும் செப்டெம்பர் மாத நிறைவுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியிலிருந்து விலகியுள்ள கலாநிதி தீபிகா உடகம தெரிவித்துள்ளர்.**

இராஜினாமா அறிவிப்பினை உத்தியோகபூர்வமாக அரசியலமைப்பு பேரவை ஏற்றுக்கொண்டதன் பின்னர் ஊடகத்தின் வார வெளியீட்டுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். குறித்த செவ்வியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

**கேள்வி:-** இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக நீங்கள் திடீரென அறிவித்தமைக்கான காரணம் என்ன?

**பதில்:-** நான் தவிசாளர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற முடிவை மிகவும் நிதானமாகக் குறிப்பிட்ட காலம் சிந்தித்தே எடுத்திருந்தேன். அந்தத் தீர்மானத்துக்கு அமைவாகவே ஜுலை முதல் வாரத்தில் எனது கடிதத்தை அரசியலமைப்பு பேரவையிடத்தில் கையளித்திருந்தேன். அரசியலமைப்பு பேரவை இரண்டு வாரங்களின் பின்னரே கூடியதோடு எனது இராஜினாமா விடயத்தையும் பகிரங்கப்படுத்தியது. தேர்தல் பரபரப்பு மிக்க சூழலில் எனது இராஜினாமா விடயம் வெளிப்பட்டதால் திடீரென நான் பதவி விலகுவது போன்று உணரப்பட்டு விட்டது.

**கேள்வி:-** தவிசாளர் பதவியில் நீடிப்பதற்கான காலம் இருக்கின்ற நிலையில் முன்கூட்டியே இராஜினாமா செய்துள்ளீரகளே?

**பதில்:-** நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சட்டபீடத் தலைவராகவும் பேராசிரியராகவும் கடமையாற்றி வருகின்றேன். அவ்வாறானதொரு நிலையில்தான் அந்தப் பொறுப்புக்களிலிருந்து விடுமுறை பெற்றுக் கொண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியைப் பொறுப்பேற்றிருந்தேன். முதல் மூன்று ஆண்டுகள் பதவிக்காலம் நிறைவடைந்ததன் பின்னர் நான் அதிலிருந்து விடைபெறுவதற்கே முனைந்திருந்தேன். எனினும், 2018 இல் ஒக்டோபர் அரசியல் புரட்சியும் ஏற்பட்டது.

அத்தகைய நிலைமை பதவி வெற்றிடத்துடன் காணப்படும் சுயாதீன ஆணைக்குழுக்களில் தாக்கம் செலுத்தும் என்ற முற்கூட்டிய சிந்தனை எம் அனைவருக்கும் இருந்தது. அதனடிப்படையில் அரசியலமைப்பு பேரவையின் தலைவர் சபாநாயகர் கரு ஜெயசூரிய ஆணைக்குழுக்களின் தவிசாளர்களை அழைத்து நிலைமைகளை விபரித்ததோடு பதவிக்காலத்தை நீடிக்க வேண்டியதன் அவசியத்தையும் தெளிவுபடுத்தினார். அதற்கமைவாக எனது பதவிக் காலமும் மேலும் நீடிக்கப்பட்டது. அச்சமயத்தில் 80 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே மீள நியமனத்தைப் பெற்றிருக்கவில்லை.

இந்நிலையில் இரண்டாவது தடவையாக பதவியில் அமர்ந்தப்பட்ட எனக்கு இன்னமும் ஒருவருடமே எஞ்சியிருக்கின்றது. எனது துறைசார் விடயப் பரப்பில் இருந்து ஓய்வுபெற்ற நபராக நான் இருந்திருந்தால் இதே பதவியில் தொடர்ந்தும் இருக்கத் தலைப்பட்டிருப்பேன். ஆனால், எனக்கு கற்பித்தல் துறையில் பாரிய பொறுப்பு இருக்கின்றது. இளைய சந்ததியைத் தயார்படுத்துவதற்கான எனது கடமையை நான் சரியாக நிறைவேற்ற வேண்டும் என்றே விரும்புகின்றேன்.

**கேள்வி:-** அரசியலமைப்பு பேரவை மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் காணப்படுகின்ற விமர்சனங்கள் குறித்து உங்களின் நிலைப்பாடு என்ன?

**பதில்:-** ஆணைக்குழுக்களின் பதவிகளுக்கான நியமனங்கள் அரசியலமைப்பு பேரவை ஊடாகவே நடைபெறுகின்றன. அந்தச் சபையில் உள்ள உறுப்பினர்களின் மூலம் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் திறன் அதியுச்சமானதாகவே உள்ளது. அந்த அடிப்படையில் அவர்களின் திறன்களையும் உள்ளீர்த்ததாகவே எனது தலைமையிலான ஆணைக்குழுவின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

மேலும் நாம் எதிர்பார்த்ததைப் போன்று 19 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அரசியலமைப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. சில ஏற்பாடுகள் கைவிடப்பட்டுள்ளன. குறிப்பாக கூறுவதானால் அரசியலமைப்பு பேரவையில் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் அதிகமாக உள்ளீர்க்கப்படவில்லை. நிறைவேற்று அதிகார ஆட்சியாளர் தனக்கு விரும்பிய ஒருவரை நேரடியாக ஆணைக்குழுவின் முக்கிய பதவிகளுக்கு நியமிப்பதை விடவும் வெவ்வேறு நிலைப்பாடுகளைக் கொண்ட மற்றும் சிவில் சமூகத்தினரின் பங்களிப்புடனான கலந்துரையாடல்கள் ஊடாக நியமனங்கள் நிகழுகின்றமை முன்னேற்றகரமானதாகக் கொள்ள முடியும். ஆனால், இன்னும் முன்னேற்றங்கள் ஏற்பட்டால் மேலும் சிறப்பாகவே இருக்கும்.

**கேள்வி:-** நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலுக்கான பரப்புரை மேடைகளில் 19 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்க வேண்டுமென்ற கோசம் பிரதான இடம் பிடித்ததை அவதானித்தீர்களா?

**பதில்:-** 19 ஆவது திருத்தச் சட்டமானது ஏற்கனவே கூறியது போன்று ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட அனைத்து விடயங்களும் உள்ளீர்க்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், 19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக பல்வேறு விடயங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மக்களுக்குப் பொறுப்புக்கூறும் நிலைமைகள் உருவாக்கப்பட்டன. விசேடமாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டன. சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டன.

மேலும் அரசமைப்பில் ஜனநாயகப் பண்புகளை வலுப்படுத்திப் பிரதிபலிக்கும் வகையில் அதிகாரங்களைக் "கட்டுப்படுத்தல்: சமப்படுத்தல்" கோட்பாட்டுக்கு அமைவாக 19 ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விசேடமாக நிறைவேற்று அதிகாரத்துறையால் இழைக்கப்படும் அநீதி அல்லது சட்ட மீறல் கேள்விக்குட்படுத்தக் கூடிய நிலைமை காணப்படுகின்றது. அரச திணைக்களங்கள், நிறுவனங்கள் ஒன்றையொன்று மேற்பார்வை செய்வதற்கான சூழல்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்விதமாக பல விடயங்களைக் கூற முடியும். ஆகவே, 19 ஆவது திருத்தத்தில் காணப்படுகின்ற விடயங்களை கீழ் நோக்கிச் செல்லும் வகையில் மாற்றங்களைச் செய்வதை தவிர்த்து அதனை மேலும் வலுவாக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அதனை மக்களே தீர்மானிக்க வேண்டியவர்களாக உள்ளனர். அவர்களின் விருப்பு வெறுப்புக்கு ஏற்பவே எதனையும் முன்னெடுக்க முடியும்.

**கேள்வி:-** ஜனாதிபதித் தேர்தலின் பின்னரான ஆட்சி அதிகாரப் போக்கும், பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் அமையப் போகின்ற புதிய ஆட்சியும் தங்களுடன் முரண்படலாம் அல்லது தங்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம் என்பதனால் முற்கூட்டியே நீங்களாக விலகிச் செல்கின்றீர்கள் என்ற தோற்றப்பாடொன்று காணப்படுகின்றதே?

**பதில்:-** முரண்பாடுகள் அல்லது அழுத்தங்கள் அல்லது விமர்சனங்களுக்காக பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டுமாக இருந்தால் கடந்த காலத்தில் அவ்விதமான பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோது நான் விலகிச் சென்றிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. முரண்பாடுகள் ஏற்பட்டு விடும் என்று அஞ்சியோ, அழுத்தங்களுக்கு அடிபணிந்தோ பொறுப்பிலிருந்து விலகிச் செல்லும் நபர் நானல்லன்.

இலங்கை மனித உரிமைகள்ஆணைக்குழுவானது, பொது மக்களின் அடிப்படை உரிமைகளுடன் தொடர்புடையது. அவர்களுக்கே அதன் உரிமையும் காணப்படுகின்றது. அவ்வாறிருக்கையில் அவ்விதமான கட்டமைப்பொன்றின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு எந்தவொருவருக்கும் உரிமை இல்லை.

அதனைவிடவும், கடந்த ஐந்து வருடங்களாக நான் பதவியில் இருந்துள்ளேன். இந்தக்காலத்தில் எந்தவொரு நபர்களோ அல்லது குழுக்களோ தலையீடுகளைச் செய்வதற்கு முயற்சிக்கவில்லை என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும்.

மேலும் தற்போது தேர்தல் காலம். இந்தத் தேர்தல் கூட ஒத்திவைக்கப்பட்ட தேர்தலாகும். ஆட்சியாளர்களை மையப் படுத்தியதாக எனது முடிவு அமைவதாக இருக்குமாயின் ஜனாதிபதி தேர்தல் நிறைவ டைந்தவுடனேயே பதவியிலிருந்து விலகிச் சென்றிருப்பேன் அல்லவா?

**கேள்வி:-** மனிதர்களுக்கு எதிரான சித்திரவதைகள் இலங்கையில் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகின்ற நிலையில் இதுபற்றி ஆணைக்குழு எவ்விதமான கரிசனையை கொண்டுள்ளது?

**பதில்:-** நான் பதவியைப் பொறுப்பேற்ற கையோடு முதலாவதாக, சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற சித்திரவதைகள் தொடர்பிலேயே கவனம் செலுத்தினோம். அவ்வாறான சித்திரவதைகளுக்கு முகங்கொடுத்தவர்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தோம்.

விசேடமாக பொலிஸாரால் தடுத்து வைக்கப்படுகின்றபோது மேற்கொள்ளப்படுகின்ற சித்திரவதைகள் தொடர்பான முறைப்பாடுகளே அதிகமாக எமக்குக் கிடைத்திருந்தன. அது பற்றிய பல்வேறு நகர்வுகளை ஆணைக்குழு மேற்கொண்ட போதும் அவ்வாறான சித்திரவதைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அவற்றைக் குறைக்க முடியாத நிலைமையே நீடித்துக்கொண்டிருக்கின்றமையானது கவலை தரும் விடயமாகின்றது. ஆகவே, பொலிஸ் ஆணைக்குழு இந்த விடயத்தில் விசேட கவனத்தைச் செலுத்தி, மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதே மிகப் பொருத்தமானதொரு செயற்பாடாக இருக்கும்.


மேலும், கொரோனா காலத்தில் சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பில் அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன. ஆகவே, மனிதர்களுக்கு எதிரான சித்திரவதைகளைக் குறைவடையச் செய்வதற்கான செயற்பாட்டில் ஆணைக்குழுவால் முழுத்திருப்தி கொள்ள முடியாது.

**கேள்வி:-** புதிய அரசியலமைப்பொன்று நாட்டிற்கு அவசியமென்று கருதுகின்றீர்களா?

**பதில்:-** ஆம், அடிப்படை உரிமைகள் சார் விடயத்திற்கு அப்பால் மனித உரிமைகள் ஆணைக்குழு செல்லவேண்டியதில்லையென்றும், அந்த விடயங்கள் உயர்ந்த மட்டத்தில் இருந்தால் போதுமானது என்றும் சிலர் கூறுகின்றனர். உண்மையிலேயே அடிப்படை உரிமைகள் உயர்மட்டத்தில் இருந்தாலும் அதனை செயற்படுவதற்கான பொறிமுறை சரியாக இருக்க வேண்டும். அதுமட்டுமன்றி உருவாக்கப்படும் அரசியலமைப்பு தனி நபர்களையோ அல்லது குழுவையோ மையப்படுத்தியதாக அல்லாது அனைத்து மக்களின் விருப்பு வெறுப்புக்கள், கருத்துக்களை உள்ளீர்த்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருக்க வேண்டும். (ஜ)

# 1921 முதல் இன்று வரை வடமாகாண பாராளுமன்றத் தேர்தல்களும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும்

16



**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

அவர்கள் மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஈ.சரவணபவன், ஆகியோர் இவர்களில் சரவணபவன், சிறீதரன் ஆகியோர் புதுமுகங்களாகும். இது போல் UPFA இல் தெரிவு செய்யப் பட்ட முருகேசு சந்திரகுமார், செலவே ஸ்திரி அலன்டயின் ஆகியோர் புது முகங்களாகும்.

தேர்தல் முடிவுகளை பழைய தேர் தல் முறையில் பார்க்கும் போது 2010 ஆம் ஆண்டுத் தேர்தலில் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாண மாவட் டத்தில் உள்ள 11 தொகுதிகளில் 10 தொகுதிகளில் (யாழ்ப்பாணம், பருத் தித்துறை, கிளிநொச்சி, கோப்பாய், மானிப்பாய், வட்டுக்கோட்டை, காங் கேசன்துறை, உடுப்பிட்டி, சாவகச் சேரி, நல்லூர்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு தொகுதியில் (ஊர் காவற்றுறை.) ஈழ மக்கள் ஜனநாய கக் கட்சி (EPDP) உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (UPFA) உம் வெற்றிபெற்றன.

**வன்னித் தேர்தல் மாவட்டம் 2010**

வன்னி தேர்தல் மாவட்டத்திற்கு 6 ஆசனங்களாகும். வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பு (ITAK,TELO, EPRLF(S)) போட்டியிட்டு 3 இடங்களை வென்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (UPFA) போட்டியிட்டு 2 இடங்களை வென்றது.ஐக்கிய தேசிய முன்னணி (UNP உள்ளிட்ட) போட்டியிட்டு ஒரு இடத்தை வென்றது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (PLOTE), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஈழவர் ஜனநாயக முன்னணி (EROS), தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜன நாயக ஐக்கிய முன்னணி, JVP உள்ளிட்ட ஜனநாயக தேசிய முன் னணி. எங்கள் தேசிய முன்னணி. தேசிய அபிவிருத்தி முன்னணி, சிங் களயே மகாசம்மதா பூமிபுத்ரா பக்ஷயா, ஜனசெத்த பெரமுன, சிறீலங்கா தேசிய முன்னணி. தமிழ் மக்கள் விடுத லைப் புலிகள், இடதுசாரி விடுதலை முன்னணி மற்றும் 12 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டன. ஆனால் அவற்றால் ஒரு ஆசனத்தைக் கூட பெறமுடியவில்லை. வன்னித் தேர்தல் மாவட்ட 2010 ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள் அட்டவணை-35 மற்றும் 36 இல் காட்டப்பட்டுள்ளன.

தேர்தல் முடிவுகளை பழைய தேர் தல் முறையில் பார்க்கும் போது 2010 ஆம் ஆண்டுத் தேர்தலில் வடக்கு மாகாணத்தின் வன்னி மாவட்டத்தில் உள்ள சகல 3 தொகுதிகளிலும் (மன் னார், முல்லைத்தீவு மற்றும் வவு னியா) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றிபெற்றது. .

நூர்தீன் மஸ்சூர் 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதி காலமானததை தொடர்ந்து ஐக்கிய தேசிய முன்னணி (UNP) சார்பில் முதலிப் பாவா பாரூக் 2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பின ராக சத்தியப் பிரமாணம் செய்து கொண் டார்.

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) அமைப்பு**

| அட்டவணை 33- இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2010 யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் | | | | | |
|---|---|---|---|---|---|
| தொகுதி | TNA | UPFA (EPDP) | UNF (UNP) | அளிக்கப்பட்ட வாக்குகள் | பதியப்பட்ட வாக்காளர் |
| சாவகச்சேரி | 7,664 | 2,777 | 1,248 | 16,656 | 65,141 |
| யாழ்ப்பாணம் | 4,713 | 3,479 | 616 | 11,200 | 64,714 |
| காங்கேசன்துறை | 5,018 | 4,518 | 584 | 13,170 | 69,082 |
| ஊர்காவற்றுறை | 1,671 | 6,441 | 392 | 10,273 | 53,111 |
| கிளிநொச்சி | 4,192 | 3,367 | 386 | 11,019 | 90,811 |
| கோப்பாய் | 7,467 | 4,377 | 1,122 | 17,705 | 65,798 |
| மானிப்பாய் | 7,194 | 5,643 | 1,424 | 18,918 | 71,114 |
| நல்லூர் | 7,490 | 3,467 | 896 | 15,091 | 72,558 |
| பருத்தித்துறை | 3,783 | 3,402 | 697 | 11,112 | 48,613 |
| உடுப்பிட்டி | 4,630 | 2,533 | 717 | 11,832 | 56,426 |
| வட்டுக்கோட்டை | 5,341 | 3,286 | 3,438 | 17,236 | 63,991 |
| தபால் வாக்குகள் | 3,813 | 1,529 | 461 | 7,095 | |
| இடம்பெயர்வு வாக்கு | 2,143 | 2,803 | 643 | 6,970 | |
| மொத்த வாக்குகள் | 65,119 | 47,622 | 12,624 | 168,277 | 721,359 |
| சதவீதம் | 43.85% | 32.07% | 8.50% | | |
| ஆசனங்கள் | 5 | 3 | 1 | | |

| அட்டவணை 34- இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2010 யாழ்- தேர்தல் மாவட்டம் தேர்தலில் வெற்றியடைந்தவர்கள் | | |
|---|---|---|
| தெரிவுசெய்யப்பட்டவரின் பெயர் | கட்சி | விருப்பு வாக்குகள் |
| மாவை சேனாதிராஜா | TNA | 20,501 |
| சுரேஷ் பிரேமச்சந்திரன் | TNA | 16,425 |
| அப்பாத்துரை விநாயகமூர்த்தி | TNA | 15,311 |
| ஈஸ்வரபாதம் சரவணபவன் | TNA | 14,961 |
| சிவஞானம் சிறீதரன் | TNA | 10,057 |
| டக்லஸ் தேவானந்தா | UPF | 28,585 |
| செலவேஸ்திரி அலன்டயின் | UPF | 13,128 |
| முருகேசு சந்திரகுமார் | UPF | 8,105 |
| விஜயகலா மகேஸ்வரன் | UNF | 7,160 |

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் (த.தே.கூ) இணைவு -2013**

சித்தார்த்தன் புளொட்டின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளராக வன்னி மாவட்டத்தில் 1994 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றம் சென்றார். 2000 ஆம் ஆண்டுத் தேர்த லில் இவரது கட்சி எந்த இடத்தையும் பெறவில்லை. 2001 ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளு மன்றம் சென்றார்.

2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் மீண்டும் போட்டியிட்டார். ஆனால் அவரது கட்சி போட்டியிட்ட எந்த ஒரு இடத்திலும் வெற்றி பெறவில்லை. 2010 ஆம் ஆண்டுத் தேர்தலிலும் போட்டி யிட்டார். இம்முறையும் அவரது கட்சி எந்த ஓர் இடத்தையும் கைப்பற்ற வில்லை.

கூட்டமைப்பின் ஆரம்பத்திலும், அதன் பெரு வெற்றியிலும் விடுதலைப் புலிகளின் பங்கு கணிசமாக இருந்தி ருக்கின்றது. கூட்டமைப்பு ஆரம்பிக் கப்படும் தருணத்தில், புளொட் இயக் கத்தையும் உள்வாங்குவது தொடர்பில் பேசப்பட்டது.

2013 ஆம் ஆண்டில் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சேர்ந்து கொண் டது. சித்தார்த்தன் 2013 மாகாண சபைத் தேர்தலில் த.தே.கூ.வேட்பாளராக யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டு வட மாகாண சபைக்குத் தெரிவானார். சித்தார்த்தன் 2015 நாடாளுமன்றத் தேர்தலில் த.தே.கூ. வேட்பாளராக யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டு 53,743 விருப்பு வாக்குகள் பெற்று நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப் பட்டார்.

**இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2015**

2015 இலங்கை பாராளுமன்றத் தேர்தல் இலங்கையின் 15வது பாராளு மன்றத்திற்கு 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக இத்தேர்தல் 2015 ஒகஸ்ட் 17 இல் நடைபெற்றது. தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் 2015 ஜூலை 6 முதல் 13 வரை ஏற்றுக் கொள்ளப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சேர்ந்து போட்டியிட்ட கட்சிகள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழீழ விடுதலை இயக்கம் என்பனவாகும்.

பாராளுமன்ற தேர்தல்கள் சட் டத்தின் 4ஆம் பிரிவுக்கமைய தேர் தலை நடத்துமாறு கட்டளையிடுகின்ற பிரகடனம் வெளியிட்ட தினத்தன்று வலுவிலிருந்த 2014ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு இத்தேர்தலுக்கான செல்லுபடியான இடாப்பாக விளங் கியது.

இதன்பிரகாரம் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத் திற்கான ஆசனங்களின் எண்ணி க்கை 7 ஆகவும் வன்னித் தேர்தல் மாவட்டத்திற்கான ஆசனங்களின் எண்ணிக்கை 6 ஆகவும் இருந் தது.

**யாழ் .மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குறைப்பு 2015**

யாழ்.மாவட்டத்தில் 1991 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை 9ஆக இருந்த நிலையில் 2015 ஆம் ஆண்டு தேர்தலில் அது 7ஆக குறைக்கப்பட்டது. வாக்காளர்களின் பதிவில் ஏற்பட்ட தாக்கமே இந்த குறைப் பிற்கு காரணம் என தெரிவிக்கப்பட் டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து குறைக் கப்பட்ட இரண்டு நாடாளுமன்ற உறுப் பினர் ஆசனங்கள், நுவரெலியா மற் றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங் களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு முந்திய ஆண்டிலும் நாடா ளுமன்ற உறுப்பினர் ஆசனங்கள் குறைக்கப்பட்டமை குறித்த செய்திகள் வெளியாகி இருந்த போதும் (2011இல் 6 ஆக இருந்தது), அது தாக்கம் செலு த்தி இருக்கவில்லை.

எனினும் இந்த ஆண்டு பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறவுள்ள நிலையில், யாழ்ப்பாணத் தில் இருந்து ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே தெரிவாகும் நிலைமை உருவாகி இருக்கிறது.

(தொடரும்...)

# கோட்டாபய - மகிந்த தலைமையிலான ஆட்சியில் சூழ்ச்சிகளுக்கு இடமில்லை!

## பிரசன்ன திட்டவட்டம்



(கொழும்பு)

கோட்டாபய - மகிந்த ஆகியோரின் ஒத்துழைப்புடன் கூடிய புதிய அரசாங்கம் உலகில் உயர்வான இடத்தில் வைக்கப்படும் எனவும் அடுத்த ஐந்தாண்டுகள் நாட்டின் அபிவிருத்தியின் பொற்காலமாக மாறும் எனவும் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை கெஹெல்பத்தர பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி பொதுத் தேர்தலில் நாட்டுக்கு எதிரான அனைத்து சக்திகளும் படுதோல்வியடைந்தன. இது வரலாற்று சிறப்புமிக்க வெற்றி. கோட்டாபய - மகிந்த தலைமையிலான புதிய அரசாங்கத்தின் கீழ் நாட்டுக்கு எதிராக சூழ்ச்சிகளுக்கு எவ்வித இடமும் கிடையாது.

கம்பஹா மாவட்டத்தில் மேலதிகமாக 5 லட்சம் வாக்குகளையும் மாவட்டத்தில் 13 உறுப்பினர்களை தெரிவு செய்யுமாறும் நான் மக்களிடம் கோரிக்கை விடுத்தேன். மக்கள் அந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளனர். நான் மாவட்டத்தின் தலைவர் என்பதால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர்கள் வெற்றி பெற நடவடிக்கை எடுத்தேன். இலக்கை அடைய முடிந்தமை மிகப் பெரிய மகிழ்ச்சியை கொடுத்துள்ளது.

இந்தத் தேர்தலில் நல்லாட்சியுடன் இருந்த பலர் நிராகரிக்கப்பட்டுள்ளனர். நல்லாட்சி அரசாங்கத்தை கொண்டு நடத்திய ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளும் தற்போது அழிந்து போயுள்ளன.

மக்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது பெரிய நம்பிக்கையை வைத்துள்ளனர். இந்த பொதுத் தேர்தலில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன பெற்ற வெற்றி உறுதியாகியுள்ளது எனவும் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# ஏற்றுமதி மேம்பாட்டு சபையின் பணிப்பாளர் நியமனம்



(கொழும்பு)

இலங்கை ஏற்றுமதி மேம்பாட்டுச் சபையின் புதிய பணிப்பாளராக சித்ராஞ்சலி திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. சித்ராஞ்சலி 34 ஆண்டு காலமாக கொள்கை மற்றும் மூலோபாய திட்டமிடல் சந்தை மேம்பாடு தயாரிப்பு மேலாண்மை, தொழில் துறை தயாரிப்புகள் மற்றும் சேவைகள் ஆகிய பிரிவுகளில் சேவையாற்றி வந்துள்ளார்.

1986 ஆம் ஆண்டில் இலங்கை ஏற்றுமதி மேம்பாட்டுச் சபையில் ஆராய்ச்சி உதவியாளராக சேவையில் இணைந்து, அவர் ஏற்றுமதி மேம்பாடு குறித்து அறிவு மற்றும் அனுபவத்தை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மஞ்சள், ஏலம் கைப்பற்றல்



(கொழும்பு)

இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட மஞ்சள் மற்றும் ஏலம் ஆகியன இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினரால் கற்பிட்டி பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் படகின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் விற்பனை செய்யும் நோக்கில் மஞ்சள் மற்றும் ஏலம் ஆகியன கொண்டுவரப்பட்டுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ஜ-4)

# தேர்தல் முடிவுகளில் மோசடி

## பாலித குற்றச்சாட்டு

(கொழும்பு)

இம்முறை தேர்தலில் தெளிவான தேர்தல் மோசடி நடந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும தெரிவித்துள்ளார்.

தனது விருப்பு வாக்கு எண்ணிக்கை லட்சத்தில் இருந்து ஆரம்பமாகும் எனவும் எனினும் இம்முறை எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு அது குறைந்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், இம்முறை வெளியான தேர்தல் முடிவுகளை ஏற்க முடியாது எனவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாலித தெவரப்பெரும குறிப்பிட்டுள்ளார்.



சிங்கள ஊடகம்ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார். (ஜ-4)

# மத்தள சர்வதேச விமான நிலைய போக்குவரத்து மீள ஆரம்பம்

(கொழும்பு)

மத்தள சர்வதேச விமான நிலை விமானப்போக்குவரத்துக்கள் நேற்று முன்தினம் மீள ஆரம்பமானது.

இதற்கமைய முதலாவது சரக்கு விமானம் நேற்று முன்தினம் மத்தள விமான நிலையத்திலிருந்து அமெரிக்கா நோக்கி பயணித்துள்ளது.

27 மெற்றிக் தொன் பொருட்களை ஏற்றிய வண்ணம் இவ் விமானம் பயணித்துள்ளது. நேற்று முன்தினம் மாலை 7.35 மணியளவில் விமானம் பயணித்ததாக விமான நிலைய முகாமையாளர் உப்புல்கலன் சூரிய தெரிவித்தார். (ஜ-4)

# விசேட போக்குவரத்து சேவை

(கொழும்பு)

பொதுத் தேர்தலை முன்னிட்டு தமது சொந்த இடங்களுக்கு சென்றவர்கள் மீண்டும் கொழும்பு திரும்புவதற்காக நேற்று 09 முதல் விசேட போக்குவரத்து சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு தூர இடங்களுக்கான பேருந்து சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதற்காக 100 பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தியுள்ளதாக சபையின் பிரதி பொது முகாமையாளர் ஏ.எச் பண்டுக குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பயணிகளின் வசதி கருதி விசேட போக்குவரத்து சேவைகள் முன்னெடுக்கப்படுவதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கூறியுள்ளது.

மேலதிகமாக பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால், நெரிசலின்றி பயணிக்க முடியும் என ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கொமாண்டர் நிலான் மிரெண்டா தெரிவித்துள்ளார். (ஜ-4)

# சுதந்திரக்கட்சியின் விசேட கூட்டம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட கூட்டமொன்று கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

இக் கலந்துரையாடல் சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால ஸ்ரீசேன தலைமையில் இடம்பெற்றது.

இம்முறை சுதந்திரக்கட்சி சார்பாக போட்டியிட்ட அனைத்து உறுப்பினர்களும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்கள் பலர் இம்முறை பொதுஜன பெரமுன ஊடாக போட்டியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# பாரதம்

## ஆந்திராவில் தீ விபத்து 11 கொரோனா தொற்றாளர்கள் பலி




(டில்லி)

இந்தியாவின், ஆந்திராவில் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் 11 கொரோனாத் தொற்று நோயாளிகள் உயிரிழந்துள்ளனர்.

ஆந்திராவின் விஜயவாடாவில் கொரோனாத் தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்த விடுதி ஒன்றிலேயே இந்தத் தீ விபத்தானது நேற்று அதிகாலை ஏற்பட்டது.

விபத்து நடந்த நேரத்தில் குறித்த கட்டடத்தில் சுமார் 30 கொரோனாத் தொற்று நோயாளர்களும் 11 மருத்துவ பணியாளர்களும் இருந்ததாக கூறப்படுகிறது.

இந்த விடுதியானது தற்போது கொரோனா சிகிச்சை நிலையமாகச் செயற்பட்டு வருகிறது.

தீ யணைப்புப் படை வீரர்களின் துரித நடவடிக்கையினால் தீ விபத்தானது பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

எனினும் இந்த அனர்த்தத்தினால் 11 நோயாளர்கள் உயிரிழந்ததுடன் ஏனையவர்கள் காயங்களுடன் பாதுகாப்பாக மீட்கப்பட்டு ஏனைய வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை குஜராத்தின் அகமதாபாத்தில் கடந்த வியாழக்கிழமை தனியார் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் ஏற்பட்ட தீ விபத்தில் 8 கொரோனாத் தொற்றாளர்கள் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-7)

## எல்லைக்குள் நடத்தப்படும் எந்த தாக்குதலுக்கும் பதிலடி தரப்படும்

### ரஷ்யா எச்சரிக்கை



(மொஸ்கோ)

ரஷ்ய நாட்டின் எல்லைப் பகுதிக்குள் ஏவப்படும் எந்த ஏவுகணையையும் அணுசக்தி தாக்குதலாக கருதி பதிலடி தரப்படும் என ரஷ்யா எச்சரித்துள்ளது.

ரஷ்ய இராணுவத்தின் அதிகாரபூர்வ பத்திரிகையான கிராஸ்னயா ஸ்வெஸ்டாவில் இந்த விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏவுகணை ஏவுதல் குறித்த தகவல்கள் தானாகவே ரஷ்ய, இராணுவ மற்றும் அரசியல் தலைமைக்கு அனுப்பப்படும் என்றும் இது வளர்ந்து வரும் சூழ்நிலையைப் பொறுத்து அணுசக்தி தாக்குதலுக்கு நிகரான பதிலடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவை அச்சுறுத்தும் வகையில் அணுசக்தி இன்றி நீண்ட தூர இலக்கை தாக்கும் ஏவுகணைகளை அமெரிக்கா தயாரிப்பதாக வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகை குறிப்பிட்டிருந்தது. இந்த நிலையில், இதற்கு எதிர்மறையாகவே ரஷ்ய பத்திரிகையில் இவ்வாறு கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கலாம் என அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-7)

## ரஷ்யாவின் விரைவான கொவிட்-19 தடுப்பூசி ஆபத்தில் முடியலாம்



(மொஸ்கோ)

உலகில் முதன் முதலாக கொவிட்-19 தடுப்பூசியை கண்டுபிடித்த பெருமையைப் பெற தீவிரமாக செயற்பட்டுவரும் ரஷ்யாவின் முயற்சியால், ஆபத்து நேரலாம் என ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழக சுகாதார வல்லுநர், லாரன்ஸ் கோஸ்டின் எச்சரித்துள்ளார்.

அத்துடன் மூன்றாம் கட்ட ஆய்வை மேற்கொள்ளாது, தடுப்பூசி மருந்து தயாரிக்க அனுமதி அளிப்பது ஆபத்தானது எனவும் அவர் கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 'ரஷ்யா, விதிமுறைகளை பின்பற்றாமல், கொரோனாத் தடுப்பூசியை வெளியிடுவதால் எந்த பயனும் இருக்காது.

மாறாக, சுகாதார சீர்கேடு தான் ஏற்படும். ஆய்வு முடிவுகள் வந்த பின்னரே, தடுப்பூசி மருந்தின் தன்மை தெரியும்' எனவும் கூறினார்.

சர்வதேச அளவில், தன் மதிப்பை உயர்த்திக் கொள்ள திட்டமிட்டுள்ள ரஷ்யா, கொவிட்-19 தடுப்பூசி மருந்தை கண்டு பிடித்து விட்டதாக அறிவித்துள்ளது.

ரஷ்யாவின்கமாலியா ஆய்வு மையம், மனிதர்களிடம், இரு கட்டங்களாக தடுப்பூசி மருந்தை செலுத்தி சோதனை செய்ததாக தெரிவித்துள்ளது.

ஆனால் இம்மையம், மூன்றாம் கட்ட சோதனையை மேற்கொள்வதற்கு முன், கொவிட்-19 தடுப்பூசி மருந்தை தயாரித்து, சந்தைப்படுத்த, ஓரிரு நாட்களில் அனுமதி வழங்கப்படும் எனத் தகவல் வெளியாகியுள்ளன.

அதன்படி, செப்டெம்பரில் தடுப்பூசி தயாரித்து, ஒக்டோபரில் விற்பனைக்கு கொண்டு வர, ரஷ்யா திட்டமிட்டுள்ளது.

கமாலியா ஆய்வு மையம், இரு மாதங்களுக்கு முன், ஒரு டசினுக்கு மேற்பட்டோரிடம் முதற்கட்ட பரிசோதனையை மேற்கொண்டது. அதன் முடிவையும் ஆதாரங்களையும் ரஷ்யா இதுவரை வெளியிடவில்லை.

இரண்டாம் கட்ட ஆய்வுக்கு ரஷ்யா அரசு அனுமதி அளித்தது. இதையடுத்து, இராணுவத்தினர் உட்பட, 76 பேருக்கு, தடுப்பூசி மருந்து செலுத்தப்பட்டது. அதன் முடிவையும் ஆதாரங்களையும் ரஷ்யா இதுவரை வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (4-7)

## தென்
## வெள்ள



(சியோல்)

### தென் கொரியாவில் 46
### குப் பின்னர் உண்டான வெ
### 30 பேர் உயிரிழந்துள்ளது

(பெய்ரூட்)

உலகையே உலுக்கிய பேரழிவுகரமான பெய்ரூட் வெடிப்பு சம்பவத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 154ஆக அதிகரித்துள்ளது. மேலும், 6 ஆயிரத்திற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். நான்கு நாட்களுக்குப் பின்னரும் காணாமல் போனவர்களுக்கான தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து வருவதால், இதன் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து சுகாதார அமைச்சக அதிகாரி ஒருவர் கூறுகையில், "இறந்தவர்களின் எண்ணிக்கை 154 ஆகும். இதில் 25 பேர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. 60 இற்கும் மேற்பட்டவர்களை இன்னும் காணவில்லை.

செவ்வாய்க்கிழமை காயமடை ந்த 5 ஆயிரம் பேரில் குறைந்தது 120 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர்" எனவும் கூறினார்.

## அமெரிக்காவில் இந்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஆற்றில் தத்தளித்துக் கொண்டிருந்த சிறுவர்களை காப்பாற்ற முயன்ற இந்திய இளைஞர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் பெர்ஷ்னோ நகரில் வசித்து வந்த இந்தியர் மன்ஜித் சிங். இவர் கடந்த புதன் கிழமை லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள கிங்ஸ் ஆற்றுக்கு தனது உறவுக்காரர் மற்றும் நண்பர்கள் உடன் சென்றார். அப்போது 2 சிறுமிகளும் ஒரு சிறுவனும் ஆற்றில் தத்தளித்துக் கொண்டு இருப்பதை அவதானித்த குறித்த நபர் உடனடியாக அவர்கள் மூவரையும் காப்பாற்ற

# வெளிநாடு

# ன்கொரியாவில் கனமழை; ளத்தில் சிக்குண்டு 30 பேர் பலி







**வில் 46 நாட்கள் தொடர்ச்சியாக பெய்த கனமழைக் ான வெள்ளம் மற்றும் அனர்த்தங்கள் காரணமாக துள்ளதுடன் 12 பேர் காணாமல் போயுள்ளனர்.**

ஏழு ஆண்டுகளின் பின்னர் தென்கொரியாவில் ஏற்பட்ட மிக நீண்டகால பருவமழை இதுவாகும்.


கொரியாவின் தெற்குப் பகுதியில் பெய்யும் இந்த கன மழை காரணமாக நேற்றைய நிலவரப்படி சுமார் 6000 பேர் அவர்களது சொந்த இடங்களிலிருந்து பாதுகாப்பு கருதி வெளியேற்றப் பட்டுள்ளதாகவும் தென்கொரியாவின் யோன்ஹாப் செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதாவது 11 மாகாணங்கள் மற்றும் நகரங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 900 இற்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர், அவர்களில் 4 ஆயிரத்து 600 பேர் பேரழிவுகள் பற்றிய எச்சரிக்கைகளைத் தொடர்ந்து தற்காலிக தங்குமிடங்களில் தங்கியுள்ளதாகவும் யோன்ஹாப் தெரிவித்துள்ளார். (4-7)

ரழிவுகர
த்தினால்
னிக்கை
லும், 6
காயம
க்குப் பின்
ருக்கான
ள் தொட
ணிக்கை
படுகிறது.
ச்சக அதி
ந்தவர்க
. இதில்
காணப்
பட்டவர்

ட ந்த 5
20 பேர்
ர்" என

## லெபனான் வெடிப்பு சம்பவம் உயிரிழப்பு 154 ஆக உயர்வு



லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை, 2 ஆயிரத்து 750 தொன் அமோனியம் நைட்ரேட் வெடித்து சிதறியதில், 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வரை வீடுகளை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## ல் இந்திய இளைஞன் ஆற்றில் மூழ்கி பலி

ளித்துக்
ாப்பாற்ற
ம் மூழ்கி

பா மாகா
து வந்த
ந்த புதன்
் உள்ள
வுக்காரர்
சன்றார்.
ுவனும்
டு இருப்
உடனடி
ாப்பாற்ற

முயற்சித்தார். தனது தலையில் அணிந்திருந்த றிபனைக் கழற்றி கயிறாக பயன்படுத்தி சிறுவர்களை மீட்க முயற்சித்தார். ஆனால் அது பலன் அளிக்காததால் சிறுவர்களைக் காப்பாற்றக் குதித்தார்.

ஆனால் எதிர்பாராத விதமாக நீரின் வேகம் காரணமாக மன்ஜித் சிங் ஆழமான பகுதி க்கு இழுத்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கினார். அதனைத் தொடர் ந்து இது குறித்து தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் வருவதற் குள் 2 சிறுமிகளையும் ஒரு சிறுவனையும் அங்கிருந்தவர்கள் போராடி மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதையடுத்து தீயணைப்பு வீரர்கள் ஆற்றுக்குள் இறங்கி மன்ஜித் சிங்கை தேடினர். சுமார் 40 நிமிடம் தேடுதல் வேட்டைக்கு பின்னர் நீருக்கு அடியில் இருந்து மன்ஜித் சிங் சடலமாக மீட்கப்பட்டார்.

மேலும் ஆற்றில் இருந்து மீட்கப்பட்ட 2 சிறுமிகளில் ஒரு சிறுமியின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## ஜனாதிபதி தேர்தலில் சீனா, ரஷ்யா, ஈரான் தலையீடு

### அமெரிக்கா குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் சீனா, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் தலையிடுவதாக அமெரிக்க உளவு தடுப்பு பாதுகாப்பு மையம் குற்றம் சுமத்தியுள்ளது.

இது குறித்து அந்த மையத்தின் இயக்குநர் பில் இவானினா அமெரிக்க உளவு அமைப்புகளுக்கு ஒரு அறிக்கை அனுப்பியுள்ளார்.

அதில், எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், பல அந்நிய சக்திகள் யார் வெற்றி பெற வேண்டும் என்ற கருத்துகளைத் தனிப்பட்ட முறையில் வெளியிட்டு வருகின்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக சீனா, ரஷ்யா, ஈரான் ஆகியவற்றின் குறுக்கீடு கவலை அளிக்கிறது என்றும் ட்ரம்பை நம்ப முடியாது என சீனா கருதுவதால், அவர் மீண்டும் ஜனாதிபதியாவதை சீனா விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே தேர்தலுக்கு முன்னரே, தனக்கு எதிரான அரசியல் தலைவர்களை ஓரங்கட்டி ஆதரவான கொள்கைகளை உருவாக்க தேவையான முயற்சிகளை சீனா செய்து வருவதாகவும் இத்தகைய நடவடிக்கை தனக்கு எதிராக திரும்ப வாய்ப்புள்ளது என்பதையும் சீனா அறிந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் அமெரிக்க உளவு தடுப்பு பாதுகாப்பு மையத்தின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மேலும் ரஷ்யா அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோபிடனுக்கு எதிராக வேலை செய்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜோபிடன், துணை ஜனாதிபதியாக இருந்தபோது, உக்ரைன் விவகாரத்தில் தலையிட்டமையே இதற்கு காரணம் எனவும் அவர், ரஷ்யாவுக்கு எதிரான கொள்கைகளை கடைப்பிடிக்க உக்ரைன் நாட்டிற்கு உதவியுள்ளார்.

அத்துடன் ரஷ்ய ஜனாதிபதி புடினை எதிர்க்கும் கட்சிகளுக்கும் ஆதரவு அளித்தமையால், அவர், அமெரிக்க ஜனாதிபதியாக வருவதை, ரஷ்யா விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஜோபிடன் ஜனாதிபதியாவதற்கு ஈரான் ஆதரவளிக்கிறது என்றும் அமெரிக்க உளவு தடுப்பு பாதுகாப்பு மையத்தின் இயக்குநர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியானால், தனக்கு எதிரான பொருளாதார தடை நீடிக்கும், நெருக்கடி மேலும் அதிகரிக்கும் என ஈரான் அஞ்சுவதால், ட்ரம்ப் மற்றும் அமெரிக்க ஜனநாயக அமைப்புகளின் மாண்பை சீர்குலைக்கும் முயற்சியில் ஈரான் ஈடுபட்டு வருகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சமூக வலைத்தளங்கள், ஊடகங்கள் ஆகியவற்றில் அமெரிக்காவிற்கு எதிராக பொய்ப் பிரசாரங்கள் செய்கிறது என்றும் அமெரிக்க உளவு தடுப்பு பாதுகாப்பு மையத்தின் இயக்குநர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (4-7)

# இந்தியாவின் புதிய விமான நிலையத்திற்கு சர்வதேச விமானத்தை அனுப்பி வைக்க வேண்டும்

## இலங்கையிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

**இந்தியாவின் குஷிநகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விமான நிலையத்திற்கு முதலாவதாக இலங்கை தனது சர்வதேச விமானத்தை அனுப்பி வைக்க வேண்டும் என இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



மகிந்த ராஜபக்ஷவின் பொதுத் தேர்தல் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அலரி மாளிகையில் அவரைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உத்தர பிரதேசத்திலுள்ள குஷிநகர் விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவிக்கும் தீர்மானத்தை கடந்த ஜூன் மாதம் இந்தியா மேற்கொண்டது. இந்த விமான நிலையம் குறித்தளவான பௌத்த தலங்களுக்கு அண்மையில் அமைந்திருப்பதால் இது இலங்கையைப் பொறுத்தவரையில் விசேட அம்சமொன்றாக அமைகின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பௌத்த மதத்தை முன்னேற்றுவதில் அக்கறை கொண்டிருக்கும் அதேவேளை சுற்றுலாத்துறை, கட்டட நிர்மாணம் போன்ற துறைகளை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கும் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் நீர்வழங்கல், உட்கட்டமைப்பு ஆகியவற்றில் இலங்கைக்கு அவசியமான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் உறுதியளித்தார். (ஜ-4)

# தேசியப்பட்டியல் நியமனத்தில் விளையாடவேண்டாம்

## சஜித்தை எச்சரிக்கும் மனோ

(கொழும்பு)

தேசியப் பட்டியல் நியமனத்தில் விளையாட வேண்டாமென ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைத்திருக்கும் 7 தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவிகளுக்கும் சிங்களவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே இவ்விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு த.மு.கூ, ஸ்ரீ.ல.மு.கா, அ.இ.ம.கா ஆகிய கட்சிகள் அவசர கூட்டமொன்றை நடத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தன.

அதற்கமைய நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற குறித்த கூட்டத்தில் "ஐக்கிய மக்கள் சக்தியில் உறுதியளித்தபடி தேசியப் பட்டியல் நியமனம் தரப்படாவிட்டால் த.மு.கூ, ஸ்ரீ.ல.மு.கா, அ.இ.ம.கா ஆகிய சிறுபான்மை கட்சிகள், நாடாளுமன்றத்தில் தனிக்குழுவாக அமர வேண்டிய நிலை ஏற்படுமென மனோ கணேசன் இதன்போது எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, இவ்விடயத்தில் உரிய தீர்வை முன்வைக்குமாறு குறித்த சிறுபான்மை கட்சிகள் சஜித் பிரேமதாஸவிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மத்திய கிழக்கிலிருந்து 447 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கியிருந்த 447 இலங்கையர்கள் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 420 பேரும் கட்டாரில் இருந்து 27 பேருமே இவ்வாறு வருகை தந்துள்ளனர்.

அதற்கு மேலதிகமாக தூதுவராக அதிகாரிகள் 16 பேரும் வருகை தந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஆயுளின் எதிரிகள்

மனிதனுக்கு ஆயுள் நூறுவருடங்கள் என்று சொல்கின்றார்கள். ஆனாலும் நிறையப் பேர் பூரண ஆயுளுடன் வாழ்வதாகத் தெரியவில்லையே.

இது ஒரு சந்தேகம்.இதே சந்தேகம் திருதராஷ்டிரனுக்கும் வந்தது. உடனே திருதராஷ்டிரன் விதுரரைப் பார்த்து கேட்கிறான்.

" ஏன் இப்படி... யாருமே பூரண ஆயுள் வாழுவதில்லை? " என்று இந்தக் கேள்விக்கு விதுரர் பதில் சொல்கின்றார்.

" ஆறு கூரிய வாள்கள்.. மனிதனுடைய ஆயுளை அழிக்கிறது. " அப்படி என்கின்றார்.

அது என்ன ஆறு கூரிய வாள்கள்? அவரே சொல்கிறார். அதிக கர்வம் , அதிகம் பேசுவது, தியாக மனப்பான்மை இல்லாமை,கோபம், சுயநலம், நண்பர்களுக்கு துரோகம்–இது தான் ஆயுளை வெட்டக் கூடிய சக்திகள். அதிக கர்வம் என்று சொன்னோம் பாருங்கள்.. அது ஒரு முக்கியமான வாள்.

தான் மிகவும் கெட்டிக்காரன்– தன்னிடம் நிறைய பணம் இருக்கின்றது... தன்னாலே தான் எதுவும் நடக்கிறது. இப்படியெல்லாம் நினைப்பது தவறு... நான் தான் நல்லவன் ஏனையவர்கள் எல்லாம் கெட்டவன் என்று நினைக்கிற பொழுது கர்வம் அதிகரிக்கின்றது. இது எங்கள் அழிவுக்குக் காரணமாக ஆகிவிடும் .அதனாலே தன் விடயத்திலே குற்றங்களையும்–பிறர் விடயத்திலே குணங்களையும் பார்க்கிறதற்குப் பழகிக் கொள்ள வேண்டும்.இரண்டாவது அதிகம் பேசுகிறவன்... வீண் வம்பை விலைக்கு வாங்குபவன்.

அது இடைஞ்சலில் கொண்டு வந்துவிட்டுவிடும்.எங்கள் பேச்சு எப்படி இருக்க வேண்டும் என்றால்.அதிலே கடுமை இருக்கக் கூடாது. உண்மையானதாக இருக்க வேண்டும். பிரியமானதாக இருக்க வேண்டும். நன்மையைக் கருதியதாக இருக்க வேண்டும்.அது தான் நல்ல பேச்சு.

மூன்றாவது விடயம். எல்லாவற்றையும் நாம் தான் அனுபவிக்க வேண்டும் என்கிற ஆசை காரணமாகத் தான் நமக்குத் தியாக மனப்பான்மை ஏற்படுவ தில்லை. பிறருக்கு உதவுவதற்காக தான் நாம் இந்த உலகத்திலே பிறந்திருக்கின்றோம் என்று உணர்ந்தவர்கள் தியாக மனப்பான்மை உள்ளவர்கள்.

அடுத்தது,கோபம்.. கோபம் தான் மனிதனுடைய முதல் எதிரி. கோபத்தை வென்றவன் தான் யோகி.அவன் தான் உலகில் சுகப்படுவான் என்பது பெரியவர்கள் வாக்கு. கோபத்திலே இருக்கிறவனுக்கு தர்மம் எது.. அதர்மம் எது என்று தெரியாது. அந்த விவேகத்தை இழந்துவிடுவான். பாவம் செய்ய ஆரம்பித்துவிடுவான். அதனால் கோபப்படாமல் இருக்க பழகிக் கொள்ள வேண்டும். அடுத்தவர்கள் கோபப்பட்டால் நாம் அதை சகிப்பதற்கு பழகிக் கொள்ள வேண்டும்.

அடுத்தது,சுயநலம். சுயநலம் தான் எல்லா தீமைகளுக்கும் காரணம். தங்களுடைய காரியம் ஆக வேண்டும் என்பதற்காக எந்த பாவத்தையும் செய்ய துணிந்துவிடுகின்றார்கள் பாருங்க... அவர்கள் தான் சுயநலவாதிகள். அடுத்தவர்கள் சந்தோசப்படுவதைப் பார்த்து நாங்கள் சந்தோசப்பட வேண்டும். அடுத்தவர்கள் துன்பத்தைப் பார்த்து நாம் வருத்தப்பட வேண்டும். இப்படி செய்தால் சுயநலம் போய்விடும் என்பது பெரியவர்கள் வாக்கு.

ஆறாவது விடயம், நண்பர்களுக்கு துரோகம்.

இந்த உலகத்திலே நல்ல நண்பர்கள் கிடைக்கிறது அபூர்வம். அப்படியிருக்கின்ற பொழுது அவர்களுக்குத் துரோகம் செய்ய நினைக்கிறது எவ்வளவு பெரிய அக்கிரமம். நமக்கு யாரிடமும் வெறுப்பு என்பதே இருக்கக் கூடாது. சிநேக மனப்பான்மை வேண்டும்.. கருணையோடு பழக வேண்டும்ஆயுளை அழிக்கும் ஆறு வாள்கள் என்று பெரியவர்கள் சொல்வது இந்த ஆறு விடயங்கள் தான்.

இந்த ஆறு விடயத்திலேயும் கொஞ்சம் கவனமாக இருந்தால் போதும், வெற்றிகரமான வாழ்க்கை நிச்சயம்.

இந்தக் காலத்து நண்பர்கள் எல்லாம் எப்படி இருக்கின்றார்கள் தெரியுமா?

ஒருத்தன் சொன்னான்.

"இன்றைக்கு என் நண்பனை அழைத்துக் கொண்டு ஹோட்டலுக்குப் போய் சாப்பிட்டோம். 100 ரூபாய் செலவாகியது என்றான் மிகவும் பெருமையாக.

" அப்படியா? " என்றேன் நான்.

இதற்கு அவன்..." ஆமாம் அதற்கு மேலேயும் செலவு செய்ய எனக்கு ஆசைதான்.. ஆனால் அது முடியாமல் போய்விட்டது.. ஏன் என்றால்... அவனிடம் இருந்ததே நூறு ரூபாய் தான்! " என்கின்றான்.

# அதிகளவான வாக்குகள் நிராகரிப்பு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 7 இலட்சத்து 44 ஆயிரத்து 373 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இது நூற்றுக்கு 4.58 சதவீதமாகக் காணப்பட்டாலும் கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடும் போது மிக அதிகளவான எண்ணிக்கையாகும்.

இம்முறை தேர்தலில் 2019 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கு அமைய ஒரு கோடியே 62 இலட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றிருந்தனர். இதில் ஒரு கோடியே 23 இலட்சத்து 43 ஆயிரத்து 302 பேர் வாக்களித்திருந்தனர். இது நூற்றுக்கு 75.89 சதவீதமாகும்.

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் ஒரு கோடியே 15 இலட்சத்து 98 ஆயிரத்து 929 வாக்குகள் செல்லுபடியானவை என்பதோடு 7 இலட்சத்து 44 ஆயிரத்து 373 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அதிகளவான வாக்குகள் நிராகரிக்கப்பட்டதற்கான நான்கு காரணிகளை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது. பொது மக்களின் தேர்தல் அறிவு, முறையாக வாக்களித்திருக்காமை, தவறான தெரிவுகள் (கட்சி, இலக்கம்) என்பவற்றோடு ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஏற்பட்ட பிளவின் காரணமாக பெரும்பாலான ஐ.தே.க. ஆதரவாளர்கள் வாக்களிப்பை தவிர்த்திருந்தமை என்பனவே அந்த காரணிகளாகும்.

2015 ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட 4 கோடியே 99 இலட்சத்து 904 வாக்குகளில் 18 ஆயிரத்து 770 வாக்குகள் மாத்திரமே நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-4)

# 450 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நாணயத்தாள்களை அச்சிட்ட மத்திய வங்கி

(கொழும்பு)

450 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான நாணயத்தாள்களை அச்சிட்டுள்ள இலங்கை மத்திய வங்கி கடந்த பெப்ரவரி கடைசி வாரம் வரை 450 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான நாணயத்தாள்களை அச்சிட்டுள்ளது.

இதில் 164.9 பில்லியன் ரூபா மார்சிலும் 92.5 பில்லியன் ரூபாய் ஏப்ரலிலும் புழக்கத்துக்கு விடப்பட்டுள்ளன.

எனினும் இந்த செயற்பாடு விரைவான அபிவிருத்தியையோ அல்லது பணவீக்கத்தையோ ஏற்படுத்தவில்லை என்று மத்திய வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வழமையாக இலங்கை மத்திய வங்கி, தம்மிடம் உள்ள நாணய ஒதுக்கத்தின் அடிப்படையிலேயே நாணயத் தாள்கள் அச்சிடப்படும்.

எனினும்- இந்த ஒதுக்கம் கடந்த ஆண்டு ஜூலை கடைசி வாரத்தில் 996.5பில்லியன் ரூபாயில் இருந்து 868 பில்லியன்களாக குறைந்தது. இது ஒருவருடத்துக்கு முன்னுள்ள ஒதுக்கமான 874.5 பில்லியன் ரூபாயை விட குறைவான தாகும்.

வணிக வங்கிகள் மத்திய வங்கியில் வைப்பிலிட்ட தொகையில் குறைவு ஏற்பட்டமை காரணமாகவே மத்திய வங்கியின் நாணய ஒதுக்கம் குறைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பை நிராகரித்த சுப்பிரமணியன்சுவாமி

(டில்லி)

நாட்டின் பிரதமராக பதவியேற்கவுள்ள மகிந்த ராஜபக்ஷ, தனது பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தனக்கு தொலைபேசி ஊடாக அழைப்பு விடுத்த நிலையில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் மற்றும் போக்குவரத்து நடைமுறைகள் காரணமாக அவரின் அழைப்பை ஏற்றுச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக பா.ஜ.க மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி கவலை வெளியிட்டுள்ளார்.



இவ்விடயம் தொடர்பாக சுப்பிரமணியன் சுவாமி தனது டுவிட்டரில் பக்கத்தில் இதனைப் பதிவேற்றியுள்ளார். மேலும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தொலைபேசி அழைப்பு வந்துள்ளமை குறித்து தான் மகிழ்ச்சியடைந்தேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# அதிக வாக்குகள் வழங்காதபோதும் தேசியப் பட்டியலில் மூன்று முஸ்லிம்கள்



(கொழும்பு)

நடைபெற்று முடிந்த முஸ்லிம்களின் அதிகளவு வாக்குகள் எங்களுக்கு கிடைக்காத போதும், தேசியப் பட்டியல் மூலமாக மூன்று முஸ்லிம்களை நியமித்து, அந்த சமூகத்தை கௌரவித்துள்ளோமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல் குறித்து, பிரதமர் மகிந்த மற்றும் அவரது சகோதரர்களுடனான சந்திப்பின் போதே பசில் ராஜபக்ஷ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான அலி சப்ரியும் பங்கேற்றார். (ஐ-4)




## எழில் காண ஏகிடுவோம் நல்லூர்

சொல்ல இனிக்கும் நாமம்
எங்கள் கந்தன்...
நல்ல மனமுடையோர்க் கருள்வான்
எங்கள் கந்தன்
வெல்ல வழிகாட்டும் வீரன்
எங்கள் கந்தன்
நல்லைப் பெரும் பதியின் நாயகனாம்
எங்கள் கந்தன்...

அ. உதயநிலா
கிளி/இராமநாதபுரம்.ம.வி

## இன்னல்கள் போக்கிடைய்யா நல்லூர் வேலவனே

அழகனே ஆனைமுகன் தம்பியே
அலங்கார கந்தனே
சங்கரன் புதல்வா
சரவண பவனே
நல்பதியாம் நல்லூரில் கோவில் கொண்டு
நல்லாட்சி புரிபவனே
நாடி வரும் பக்தர்களுக்கு
நல்ல வரம் அளிப்பவனே

தமிழ் கடவுள் முருகனே
உன் அடியவர்கள் தக்க தலைமை இல்லாது
தவிக்கிறார்கள் அழகனே
உன்னுடைய வேலாயுதம் கொண்டு சகல
இன்னல்களையும் போக்கிடைய்யா
நல்லூர் வேலவனே

தே. இளங்கோவன்
கோண்டாவில்.

## திருவிழா நாயகனே போற்றி


கந்தசஷ்டி நல்விழா
கார்த்திகைத் தீப விழா
மஞ்சத்தில் ஓர் விழா
மயில் மீதமர்ந்து கயிலாயத் திருவிழா
காண்போம் நல்லூர்ப் பதியில்
காலம் முழுவதுமே
மாண்போடு என்றும்
மகிழ்ந்திருந்து நாமே.

இ.சிவசங்கர், அதிபர்
யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்

## சந்தம் சிந்தும் நல்லைக் கந்தன்

சூது வாது போதை மீது
சுழலு முழலும் மண்ணிலே
ஏது யாக்கை யெங்கும் வேட்கை
இதுவா வாழ்க்கைப் பண்ணிலே
யாது செய்த போது மேதும்
யாம றியோம் கண்ணிலே
பூத லத்தைக் காத்த லுந்தன்
பொறுப்பு நல்லைக் கந்தனே!

கலாபூஷணம் சந்தக்கவிஞர்.
நவ.பாலகோபால்



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

39

கலாநிதி முருகர் குணசிங்கம்

தாம் ஈழத்தமிழர்கள் என்ற தனித்துவமான அடையாளத்தையே நிலைநிறுத்திக் கொள்ளச் செய்து இருக்கின்றது என்பதை கடந்த 30 ஆண்டு கால அவர்களின் புலம்பெயர்வு வாழ்வு வெளிப்படையாகக் காட்டி நிற்கின்றது.

ஆனால் 1970களில் இருந்தே மேற்படிச் செயற்பாடுகளில் தொழில் வாய்ப்புகள் மற்றும் மேற்படிப்பிற்காகவும் பிரித்தானியா சென்ற ஈழத்தமிழர்களே முன்னின்று தொடக்கியவர்களாகவும் இதன் காரணமாக பிரித்தானியாவே ஈழத் தமிழரின் அரசியல் பிரச்சினையில் ஒரு மையப்பகுதியாகவும் **(Epicentre)** அங்கிருந்தே ஈழத்தமிழர் அரசியல் அதிர்வு அலைகள் ஏனைய ஐரோப்பிய, அமெரிக்க, ஆசிய பசுபிக் நாடுகளுக்குப் பரவுவதையும் பார்க்க முடிகிறது.

ஆனால் கடந்த ஓரிரு தசாப்தங்களில் ஈழத்தமிழர்களின் அரசியற் பிரச்சினையின் மையப்பகுதியாக கனடா இடம்பெறுவதையும் அறிய முடிகிறது.

மேற்படி சமூக நிலைமைகள் பற்றியும் ஈழத்தமிழர்களுடைய நிறுவனாங்களின் பங்களிப்புகள், செயற்பாடுகள் பற்றியும் எதிர்வரும் அத்தியாயங்களில் விரிவாக ஆராயப்படும்.

மறுபுறத்தில் மேற்படி செயற்பாடுகள், அர்ப்பணிப்புகள், சேவைகளுக்கு எதிராக ஈழத்தமிழரின் மற்றொரு பிரிவினர் விமர்சனங்களையும் எதிர்ப்புகளையும் தெரிவித்து வருவது மிகவும் கவலைக்குரியதாகும். இத்தகையவர்கள் தாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாது தனிப்பட்ட போலியான தற்பெருமையால் **(Fake Ego)** நேருக்கு நேர் முகம் கொடுத்து தமது கருத்துக்களை கலந்துரையாடாமல் சமூகத்தின் முன் பிரச்சினைகளை முன்வைப்பதில் திறமை அற்றவர்களாகவும் தமது தவறுகளை ஏற்க மறுப்பவர்களாகவுமே காணப்படுகின்றார்கள்.

இவர்களின் இவ்வாறான போக்கு தமிழ்த் தேசிய விடுதலையைப் பாரிய அளவில் பின்னோக்கித் தள்ளி இருக்கின்றது என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வதும் இல்லை.

ஈழத்தமிழர்கள் தமது மண்ணையும் மக்களையும் தம் உயிருக்கும் மேலாக நேசிப்பவர்கள். அந்த மண்ணில் இருந்தும் மக்களில் இருந்தும் வலுக்கட்டாயமாகப் பிரிக்கப்பட்டவர்கள்.

தமது தேசத்தையும் தமது மக்களையும் உயிருக்கு மேலாக நேசித்த தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுக்கு சகல வழிகளிலும் ஆதரவாகவும் அரவணைப்பாகவும் இருந்து வருகிறார்கள் என்பதை உலகம் நன்கு அறியும்.

அவ்வாறான அனைவருமே ஈழ விடுதலைப் புலிகளின் தேச விடுதலையைத் தமது மனங்களிலும் தோள்களிலும் சுமந்து கொண்டு புலம்பெயர்ந்து வந்தவர்கள்.

ஆகவே அவர்கள் தங்கள் தாய்நாட்டின் விடுதலைக்கான சகலவற்றையும் புலம்பெயர் நாடுகளில் மேற்படி நிறுவனங்கள், அமைப்புகளினூடாகத் தொடர்ந்து செய்வார்கள்.

அவர்களின் அத்தனை செயற்பாடுகளும் நிறக்கண்ணாடி அணிந்து கொண்டு மேற்படி நிலைமைகளைப் பார்ப்பவர்கள், தேசபக்தி அற்றவர்களின் விமர்சனத்திற்கு உட்பட்டவையாகத்தான் இருக்கும்.

ஆனால் புலம்பெயர் தமிழர்களை அவர்களின் செயற்பாடுகளில் இருந்து மாற்ற முடியாது என்பதை அவர்கள் உறுதியாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஈழத்தமிழர்களுடைய தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் சட்டப்படியானது. எனவே புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களும் ஈழத்தமிழ் அமைப்புகளும் சட்டப்படியாகவும் ஜனநாயக வழிகளிலும் தமது தேச விடுதலைக்காக ஒருங்கிணைந்து தொடர்ச்சியாகப் போராட வேண்டிய கட்டாயத்திற்குள் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் ஒருபோதும் மறக்க முடியாது.



யூத இனம்

யூத இனம், புலம்பெயர்ந்து வாழ்ந்த நாடுகளில் இருந்து கொண்டே பல அர்ப்பணிப்பு, தியாகங்களைப் புரிந்து தமது தாய்நாட்டை அமைத்துக் கொண்டார்கள்.

அதுபோலவே ஈழத்தமிழர்கள் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து கொண்டு தமது தாயகத்தின் விடுதலையை வென்றெடுப்பதற்காக அர்ப்பணிப்புகளையும் தியாகங்களையும் புரிந்து வருகின்றார்கள்.

அவர்கள் செல்வதும் தோற்பதும் அவர்களின் தொடர்ச்சியான பங்களிப்புகளிலும் அர்ப்பணிப்புகளிலும் தியாகங்களிலுமே முழுமையாகத் தங்கி நிற்கின்றது.

## ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகள்

(ஆங்கில மொழி நடைமுறையில் இல்லாத நாடுகள்)

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, இத்தாலி, நோர்வே, சுவீடன், டென்மார்க் ஆகிய ஆங்கில மொழி நடைமுறையில் இல்லாத நாடுகள் இந்த ஆய்வுப் பகுதியில் இடம்பெறுகின்றன. இந்நாடுகளிலும் அதிகமான ஈழத்தமிழர்கள் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். ஐரோப்பியாக் கண்டத்தின் போர்த்துக்கல், ஸ்பெயின் போன்ற நாடுகளில் ஈழத்தமிழர்கள் மிகச் சிறு தொகையினரே அகதிகளாக வாழ்ந்து வருவதால் அவை இந்த ஆய்வுப் பகுதியில் இடம்பெறவில்லை.

மேற்கண்ட நாடுகள் அநேகமாக ஆங்கிலமொழி பேசாத அல்லது நடைமுறையில் இல்லாத தனித்தனித் தேசிய மொழிகளைப் பேசுகின்ற நாடுகள் ஆகும். மேற்கண்ட நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களுள் சிறு தொகையினர் நடுத்தர வகுப்பினராகவும் பெரும்பான்மையானவர்கள் கீழ்த்தட்டு வர்க்கத்தில் உள்ளவர்களுமாக இருக்கின்றார்கள்.

சிலருக்கு ஆங்கில அறிவு நன்றாகவும் பெரும்பான்மையினர் ஓரளவுக்கு விளங்கிக் கொள்ளக் கூடியவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இவர்கள் அனைவரும் தமது தாய் நாட்டில் தமிழ் மொழி மூலம் கல்வி கற்றவர்கள்.

ஆங்கிலமும் ஒரு பாடமாக அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. ஆனால் பிரான்ஸ், ஜேர்மனி, டச்சு, இத்தாலி மொழிகளிலோ அல்லது ஸ்கண்டினேவிய நாடுகளில் பேசப்படுகின்ற மொழிகளிலோ எதுவித அறிவும் இல்லாதவர்கள்.

இந்நிலைமை ஈழத் தமிழர்களைப் பல்வேறு வழிகளில் பாதித்தது. ஏற்கனவே கலந்துரையாடப்பட்ட பிரித்தானியா, அமெரிக்கா, கனடா ஆசிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் குடும்ப வாழ்வும் சமூக நிலைமைகளும் குறிப்பாக இளம் தலைமுறையினர், வயோதிபர்களின் வாழ்க்கையும் அவர்களின் நிலைமைகளும் இந்த ஆய்வுப் பகுதியில் இடம்பெறும் நாடுகளில் வாழும் மேற்படி பிரிவினரின் குடும்ப வாழ்வும் சமூக நிலைமைகளும் அநேகமாக ஒன்றுபட்டதாகவே காணப்பட்டாலும் சில வேற்றுமைகளும் உள்ளன.

எனவே மேற்கண்ட புவியியல் பிரதேசங்களில் வாழும் ஈழத்தமிழர்களின் ஒன்றுபட்ட, பொதுவான அம்சங்கள் இந்த ஆய்வுப் பகுதியில் "கூறியது கூறல்" **(Repetition)** காரணமாகத் தவிர்க்கப்படுகின்றன. முக்கியமாக மாறுபாடான குடும்ப, சமூக நிலைமைகளே இந்த ஆய்வுப் பகுதியில் இடம் பெறுகின்றன.

முதலாவதாக மேற்கூறிய நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் பெரும்பான்மையாக, 1980களை அடுத்து அகதிகளாகச் சென்று வாழ்பவர்கள்.

மிகச் சிலரே 1970களில் இருந்து தொழில் அடிப்படையில் புலம்பெயர்ந்து சென்று வாழ்பவர்கள். இருப்பினும் அவர்களும் பின்னர் அகதி அந்தஸ்துகோரி அகதிகளாக வாழ்வதாகவே புள்ளி விபரங்கள் மூலம் அறிய முடிகின்றது.

இரண்டாவதாக மேற்படி நாடுகளுக்கு இளம் வயது ஈழத்தமிழர்களே முதலில் அகதிகளாகச் சென்றனர். பின்பு திருமணத்தின் ஊடாகவும் குடும்ப மீள் இணைவு மூலமாகவும் தமது குடும்பத்தினரை வரவழைத்துக் கொண்டனர்.

1990களையடுத்து நடுத்தர வயதுடையவர்களும் மேற்கண்ட நாடுகளுக்கு அகதிகளாகச் செல்வதைக் காண முடிகின்றது.

மேலும் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்தவர்களுள் குறிப்பிடத்தக்களவு தொகையினருக்கு அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டமையினால் அவர்களுள் சிலர் இலங்கைக்குத் திருப்பியும் அனுப்பப்பட்டுள்ளனர்.

சிலர் கனடா, பிரித்தானியா மற்றும் ஆசிய நாடுகளுக்குச் சென்று உள்ளனர் என்பதனை பல்வேறுபட்ட புள்ளிவிபர அறிக்கைகள் ஊடாகவும் ஆய்வு அறிக்கைகள் ஊடாகவும் அறிய முடிகின்றது.

மூன்றாவதாக மேற்கண்ட நாடுகளில் ஆங்கில மொழி நடைமுறையில் இல்லாததால் ஈழத்தமிழர்களது குடும்ப வாழ்க்கை தொழில், பிள்ளைகளின் கல்வி, சமூக, அரசியல் முன்னேற்றங்களுக்குப் பெரும் தடையாக **(Handicap)** இருந்துள்ளது.

அவர்கள் உடனடியாகத் தொழில்களைப் பெற முடியவில்லை. அந்நாட்டு அரசு வழங்கிய சலுகைகளைப் பெற்றுத் தான் வாழ்க்கையை நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அதனால் தமது குடும்ப, சமூக வாழ்க்கையை ஒழுங்காக தொடங்க முடியவில்லை. அத்தோடு தமது பிள்ளைகளை அந்தந்த நாட்டில் நடைமுறையில் உள்ள மொழிகளில் கல்வியைத் தொடர வைப்பதில் அதிக சிரமங்களை எதிர்நோக்க வேண்டியதாயிற்று.

எனவே தொடக்க காலங்களில் அவர்களுடைய பிள்ளைகளின் கல்வி பின்தங்கியே காணப்பட்டது. சகல மட்டத்தினரும் விரும்பியோ விரும்பாமலோ அந்தந்த நாட்டு மொழிகளைக் கட்டாயம் படிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

(தொடரும்)

# அங்கொட லொக்கா உயிரிழந்துவிட்டாரா?

## விசாரணைகள் தீவிரம்

(டில்லி)

**பல்வேறு குற்றங்களுக்காக தேடப்பட்டு வந்த அங்கொட லொக்கா, இந்தியாவில் கொலை செய்யப்பட்ட பின்னர் அவரது உடல் மதுரையில் எரிக்கப்பட்டதாக கூறப்பட்ட விடயம் தொடர்பில் தற்போது இந்திய மத்திய குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**



சி.பி.ஐ. எனப்படும் இந்திய மத்திய குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் 7 குழுக்கள் இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும், இது தொடர்பில் இரு வழக்குகளை கோவை குற்றவியல் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள அவர்கள், இவ் விவகாரத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரு பெண்கள் உள்ளிட்ட மூவரை தமது பொறுப்பில் எடுத்து தடுத்து வைத்து விசாரிக்க அனுமதிகோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கொட லொக்கா நஞ்சூட்டி கொலை செய்யப்பட்டு அவரது உடல் எரிக்கப்பட்டு விட்டதாக இலங்கை ஊடகங்கள் வெளியிட்ட தகவலை அடுத்து, இலங்கை பொலிஸார் 2002 ஆம் ஆண்டில்,25 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்பில் பரஸ்பர தகவல் பரிமாற்றுச் சட்டத்தின் கீழ் இந்தியாவின் உதவியை அது குறித்து உறுதி செய்ய கோரியது.

இந்நிலையிலேயே இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த இந்திய பொலிஸார் அங்கொட லொக்கா என கருதப்படும் நபரின் உடலை எரிக்க, அவர் தொடர்பில் போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் தியாகேஸ்வரனையும் சிவகாமி சுந்தரி என்ற சட்டத்தரணியையும் கைது செய்தனர்.

27 வயதான அமானி தான்ஜி என்ற பெண் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு சென்று கோயம்புத்தூர் - சேரன்மாநகரில் அங்கொட லொக்காவுடன் வசித்து வந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்த நிலையில் அவரையும் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்நிலையிலேயே அம் மூவரையும் தமது பொறுப்பில் வைத்து, உயிரிழந்தவர் உண்மையிலேயே அங்கொட லொக்காவா என்பது தொடர்பிலும் அவர் எவ்வாறு உயிரிழந்தார் என்பதை உறுதி செய்யவும் விசாரணைகளை முன்னெடுக்க சி.பி.ஐ.க்கு பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே மரணம் தொடர்பாக ஒரு வழக்கும் போலி ஆவணங்களை பயன்படுத்தி தங்கியிருந்ததாக மற்றொரு வழக்கும் கோவை குற்றவியல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இந்த நிலையிலேயே, கைது செய்யப்பட்டுள்ள மூவரையும் 7 நாட்களுக்கு தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கான அனுமதியை வழங்குமாறு இந்திய மத்திய குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கோரப்பட்டுள்ளது. அது தொடர்பிலான தீர்மானம் இந்த வாரம் வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியீடு

(கொழும்பு)

நிறைவடைந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று, பாராளுமன்றத்திற்கு தெரிவான 196 உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி வெளியாகியுள்ளது.

குறித்த வர்த்தமானி, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய உள்ளிட்ட உறுப்பினர்களின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த 196 உறுப்பினர்களையும் 1981 இன் முதலாம் இலக்க நாடாளுமன்ற சட்டத்தின் 62 ஆவது சரத்திற்கு அமைய தெரிவு செய்துள்ளதாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## ஒருவர் வெட்டிக் கொலை

(கொழும்பு)


அம்பலாங்கொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆந்ததொல சந்தியில் வெட்டுக்காயங்களுடன் இருந்த நபர் ஒருவர் பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

பரகஹதொட பகுதியை சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் அம்பலாங்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4)

## வெள்ளத்தில் மூழ்கியது கண்டி






(கண்டி)

தொடர்ச்சியாக பெய்யும் கன மழை காரணமாக கண்டி நகரம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

கண்டி நகரத்திலுள்ள வங்கியொன்றின் பிரதான கட்டடத்தின் வாகன நிறுத்துமிடத்திற்கு அருகிலுள்ள பல கடைகள், நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கன மழையில் மூழ்கியுள்ளன.

மேலும் ஆட்டோ கடைகள் உள்ளிட்டவைகளும் சுமார் மூன்று அடி நீரில் மூழ்கியிருந்தன. (ஐ-4)

## பெரிய வெங்காயச் செய்கை பாதிப்பு



(கொழும்பு)

தம்புள்ளை, சீகிரிய, கலேவெல, நாவுல, லக்கல ஆகிய பகுதிகளில் பெரிய வெங்காயச் செய்கைகள் முற்றிலும் அழிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இனந்தெரியாத நோயொன்றின் காரணமாக வெங்காயச் செய்கைகள் இவ்வாறு அழிந்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-4)

## இராமர் கோவில் பூமி பூஜையை தொடர்ந்து அயோத்தியில் குவிந்த பக்தர்கள்

(அயோத்தி)

இராமர் கோவிலுக்கு பூமி பூஜை நடந்ததை தொடர்ந்து அயோத்தியில் நேற்று முன்தினம் ஏராளமான பக்தர்கள் குவிந்தனர்.

இராமர் கோவிலுக்கு பூமி பூஜை நடந்ததை தொடர்ந்து அயோத்தியில் ஏராளமான பக்தர்கள் குவிந்தனர். அவர்கள் அங்குள்ள அனுமன் கோவிலில் சுவாமி தரிசனம் செய்தும், சரயு நதியில் நீராடியும் குதூகலித்தனர்.



பல்லாண்டு கால சட்டப் போராட்டம் முடிவடைந்ததை தொடர்ந்து, ராமபிரான் அவதரித்த அயோத்தியில் பிரமாண்ட கோவில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழாவும், பூமி பூஜையும் நடைபெற்றது.

இது நாடு முழுவதும் மிகப் பெரும் கொண்டாட்டங்களை உருவாக்கி உள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நிகழ்வுகளை தொடர்ந்து அயோத்தியில் மக்கள் குவிந்துள்ளனர். (ஐ-4)

# தேசியப்பட்டியல் அறிவிப்பு போலியானது

## சஜித் மறுப்பு

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சக்தியின் பெயரில் வெளியாகிவரும் தேசியப் பட்டியல் விபரம் போலியானதென ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**




கொழும்பில் நேற்று முந்தினம் காலை விசேட பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்னும் தேசியப்பட்டில் இறுதிப்படுத்தவில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலை நாளை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குப் பெற்றுத்தருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசியப் பட்டியலில் 7 ஆசனங்கள் கிடைக்கப்பெற்ற நிலையில், ஆசனங்களுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வது தொடர்பான கலந்துரையாடல் தற்போதைய நிலையில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# ஐ.தே.கவின் தலைவராக ரணிலே நீடிப்பார்?



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் வரை ரணில் விக்கிரமசிங்கவே அக்கட்சியின் தலைவராக இருப்பாரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறைவடைந்த பொதுத்தேர்தலில், ஐக்கிய தேசியக்கட்சி படுதோல்வியடைந்ததை தொடர்ந்து அவசர கூட்டமொன்றை அக்கட்சி கடந்த வெள்ளிக்கிழமை நடத்தியது.


இதன்போது, தலைமைத்துவம் குறித்து தீர்மானம் எடுக்கும்வரை ரணில் விக்கிரமசிங்கவே தலைவராக இருப்பாரென தெரிவிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சி தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்க, தலைமைப் பதவியிலிருந்து விலகுவது குறித்த விருப்பத்தை வெளியிட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ-4)

# கடல் அலைகள் கரையோரப்பகுதிக்கு வரக்கூடிய சாத்தியம்

(கொழும்பு)

சப்ரகமுவ, மத்திய, மேல், தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.



நாடு முழுவதும் குறிப்பாக வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 - 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

பேருவளையில் இருந்து காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கரையோரத்தை அண்டிய பகுதிகளில் உயர் அலைகள் காரணமாக கடல் அலைகள் கரையை அண்டிய நிலப் பகுதிகளுக்கு வரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்கள் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(ஐ-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2081


### ராம்ராஜ்



வாயை மூடிக்கொண்டு கம்முனு இருந்தா கொரோனா மட்டுமல்ல எந்த பிரச்சினைகளும் வராது...

### அஜந்தன்

உண்மையால் காயப்படுத்தி விடுங்கள்... ஆனால் பொய்யால் திருப்திப்படுத்த நினைக்காதீர்கள்!



### கண்மணி

எல்லா சூழ்நிலைக்கும் பொருந்தக் கூடிய ஒன்று அமைதி...!!



எந்தச் சூழ்நிலைக்கும் பொருந்தாத ஒன்று கோபம்...!!

### சாருமதி

யாருடனும் உன்னை ஒப்பிட்டுப் பார்க்காதே



ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்துவம் உண்டு

### டயன்சி



பலமும் அன்புதான்
பலவீனமும் அன்புதான்


### குமரன்

யாரும் ஆரம்பத்தில் இருப்பது போல் கடைசி வரை இருப்பதில்லை



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிறு போக அறுவடையில் 600 தொன்நெல் கொள்வனவு



(கொழும்பு)

சிறுபோக அறுவடையில் 600 தொன் நெல்கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்திலேயே அதிக தொகை நெல் கொள்வனவு செய்யப்பட்டதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் பணிப்பாளர் ஜட்டால் மான்னப்பெரும தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் 400 தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, எதிர்வரும் வாரம் முதல் ஈரப்பதனுடனான நெல்லை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமென நெல் சந்தைப்படுத்தல் சபையின் பணிப்பாளர் ஜட்டால் மான்னப்பெரும தெரிவித்துள்ளார்.

ஈரப்பதனுடனான நெல் ஒரு கிலோகிராமுக்கு 44 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# செய்தித்துளிகள்

## உயர்தரப் பரீட்சை மீள் மதிப்பீட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன

(கொழும்பு)

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை மீள் மதிப்பீட்டு பெறுபேறுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வாறு, வெளியிடப்பட்டுள்ள மீள்மதிப்பீட்டு பெறுபேறுகளை **www.doenets.lk** என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் மொத்தமாக 61ஆயிரத்து 248 பேர் உயர்தர பரீட்சையின் விடைத்தாள் மீள் பரிசீலனைக்காக விண்ணப்பித்திருந்தனர்.

இதேவேளை, குறித்த பெறுபேறுகள் தொடர்பாக 011-278 4208, 011-278 4537, 011-318 8350, 011-314 0314 மற்றும் 1911 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## உழவு இயந்திரம் குடைசாய்ந்ததில் இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(ஏறாவூர்)

உழவு இயந்திரம் குடைசாய்ந்ததில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு பதுளை வீதியை அண்டியுள்ள கரடியனாறு பொலிஸ் பிரிவின் பண்டாரியாக்கட்டு வயல் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபர் தனது தந்தையின் நெல் வயலை உழுது பண்படுத்துவதற்காக கடந்த வெள்ளிக்கிழமை மாலை வீட்டிலிருந்து உழவு இயந்திரத்தை செலுத்திச் சென்று நெல் வரப்புக் கட்டில் ஏறும்போது உழவு இயந்திரம் குடைசாய்ந்துள்ளது.

அச்சந்தர்ப்பத்தில் இவர் உழவு இயந்திரத்தின் கீழே நசுங்குண்டு படுகாயமடைந்துள்ளார்.

அங்கிருந்தவர்கள் அவரை உடனடியாக பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் நோக்கில் எடுத்துச் செல்கையில் இடைவழியில் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

# ஆன்மீகம்



## செய்யும் தொழிலே தெய்வம்!



விரைவாக இந்த இரு வருடம் ஓடிவிட்டால் போதும்! வி.ஆர்.எஸ். (கட்டாய ஓய்வு திட்டம்) வாங்கிக் கொண்டு வீட்டில் நிம்மதியாக இருப்பேன். அதுவரை வேறுவழி இல்லை அலுவலகம் சென்றுதான் ஆக வேண்டும்' என்று அலுத்தபடி அலுவலகம் செல்கிறவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இப்படிப்பட்டவர்கள் ஓய்வு பெற்றாலும் வீட்டில் ஒழுங்காக இருக்கமாட்டார்கள். ஓய்வுக்காலமும் அவர்களுக்கு ஓலமிடும் காலமாகவே மாறிவிடும். காரணம் என்ன என்கிறீர்களா? ஏற்றுக்கொண்ட பணியில் இதயபூர்வமாக ஈடுபடாததால் அலுவலகம் ஒரு சுமையாகவே அவர்களுக்கு ஆகிவிடுவது போல் ஓய்வுக்காலத்தில் வீடும் ஒரு பாரமாகவே விளங்கும்!

வேண்டாவெறுப்பாக ஒரு வேலையில் ஈடுபட்டால் விளைவுகளும் வித்தியாசமாகத் தானே இருக்கும்? 'செய்யும் தொழிலே தெய்வம்' என்கிற பொருள் புலப்படும் முறையில் தான் நம் செம்மொழித்தமிழில் அந்தச் சொல்லே அமைந்துள்ளது.

எப்படி என்கிறீர்களா? 'தொழத்தக்கது - அதனால் தொழில்' என்கிறது நம் தமிழ்! வழிபாடாகத் தொழிலைக் கருதி மகிழ்ச்சியான மனநிலையுடன் செய்யும் தொழிலில் பரிபூரணமாக ஈடுபடுபவன் பரமசந்தோஷமாகத் திகழ்வான் என்பது உறுதி. அன்று அதிகாலையிலேயே எழுந்துவிட்டார் அவர். அவரின் மனைவி வந்து 'என்ன இவ்வளவு சீக்கிரமாக ஞாயிற்றுக்கிழமை அதுவுமாக எழுந்து விட்டீர்களே?' என்றாள்.

'முடிக்க வேண்டிய முக்கியமான வேலை ஒன்று அலுவலகத்தில் பாக்கி உள்ளது. இன்றும் நான் அலுவலகம் செல்லப் போகிறேன்' என்றார் அவர். 'என்னதான் அலுவலக வேலையோ? இன்று ஒருநாளாவது நிம்மதியாக வீட்டில் இருக்கக் கூடாதா?' என்றாள் மனைவி. 'நிம்மதியாக இருப்பதற்குத்தான் அலுவலகம் செல்கிறேன்.

அந்த வேலையை குறைவின்றி செய்தால் தான் எனக்கு நிம்மதி வரும். பிறகு சாயங்காலம் வீட்டிற்கு வந்தாலும் சந்தோஷமாக இருப்பேன்' என்றார். ஈடுபாட்டுடன் தொழிலில் இணைவதே ஈடற்ற இன்பம். தாமரை இலையில் தண்ணீர்த் துளிகள் போல பொருந்தியும், பொருந்தாமலும் பணிகளில் ஈடுபடுவோர்க்கு அமைதி இன்மையும், அசதியும், அலுப்புமே மிஞ்சும்.

பகவத்கீதை பதினெட்டு அத்தியாயங்கள் கொண்டது. அனைத்து அத்தியாயங்களின் தலைப்பும் 'யோகம்' என்றே முடியும். கர்ம யோகம், ஸாங்க்ய யோகம், விபூதி யோகம் என அத்தியாயங்கள் பதினெட்டு.

'யோகம்' என்ற சொல்லிற்கு என்ன பொருள் என்றால் பொருந்துக! எச்செயலில் நீ ஈடுபட்டாலும் அதனோடு பொருந்துக. இரண்டறக் கலந்து அத்தொழிலில் ஈடுபடுக என்பதுதான் அர்த்தம்.

பகவத்கீதை அருளிச் செய்த பரந்தாமன் வாழ்விலிருந்தே இதற்கான சம்பவம் ஒன்றைப் பார்க்கலாமா? திருமால் யார்? கம்பர் தான் எழுதிய இராமாயணக் காவியத்தின் தொடக்கப்பாடலிலேயே திருமால் யார் என்று தெரிவிக்கின்றார்.

உலகம் யாவையும் தாம் உள வாக்கலும்

நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா

அலகிலா விளையாட்டு உடையார் அவர்


தலைவர்! அன்னவர்க்கே சரண் நாங்களே! (தொடரும்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 130 | 130 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 220 | 280 |
| தக்காளி | 80 | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100 |
| கோவா | 160 | 130 | 140 | 140 |
| கரட் | 120 | 160 | 160 | 200 |
| பூசணி | 80 | 70 | 80 | 80 |
| புடோல் | 80 | 60 | 60 | 100 |
| வாழைக்காய் | 140 | 130 | 110 | 140 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 50-150 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 180 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 200 | 160 | — | 200 |
| பயற்றங்காய் | 140 | 80 | 60 | 120 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 100 | 160 |
| கறிமிளகாய் | 360 | 320 | 260 | 400 |
| முருங்கைக்காய் | 160 | 120 | 140 | 120 |
| போஞ்சி | 200 | 280 | 260 | 280 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 180 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 60-80 |
| இராசவள்ளி | --- | --- | --- | --- |
| வெங்காயப்பூ | 250 | 240 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 80 | 30-40 | 60 |




## அழகான குழந்தை



அக்பர், ஒருநாள் பீர்பாலிடம் என் பேரன்தான் உலகிலேயே அழகானவன் என்றார்.

அதற்கு பீர்பால், இல்லை மன்னா, உங்கள் பேரனை விட அழகானவன் இருக்கிறான்.

அக்பர் என் பேரனை விடவுமா? சாத்தியமேயில்லை என்றார்.

உடனே பீர்பால், அரசே, என்னோடு புறப்பட்டு வாருங்கள் அவனை நான் காட்டுகிறேன் என்றார்.

அக்பரும் பீர்பாலும் மாறுவேடத்தில் நகரின் ஒதுக்குப் புறத்தில் குடிசைகள் நிரம்பிய பகுதிக்குச் சென்றனர்.

அங்கே ஒரு குழந்தை மண் புழுதியில் இறங்கி விளையாடிக் கொண்டிருந்தது.

உடலெங்கும் மண் ஒட்டி, கிழிந்த ஆடை அணிந்து, ஒழுகும் மூக்கோடு இருந்த குழந்தையை அக்பருக்குக் காட்டி, இதுதான் உங்கள் பேரனை விட அழகான குழந்தை என்றார் பீர்பால்.

அக்பர் திகைத்துப் போய் இந்தக் குழந்தையா எனது பேரனை விடவும் அழகு? என பீர்பாலிடம் கேட்டார்.

ஆம் அரசே, என்று அக்பரிடம் சொல்லிய மறுகணமே, பீர்பால் குழந்தையை கிள்ளி விட்டு மறைவாக நின்று கொண்டார்.

பீர்பால் கிள்ளியதால் வலி தாளாமல் குழந்தை சத்தமாக அழத் தொடங்கியது.

குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்டு குடிசையில் இருந்து குழந்தையின் தாய் ஓடி வந்து, அழகான சந்திரன் போல் ஒளி வீசும் என் குழந்தை ஏன் அழுகின்றது... என் செல்லக் குட்டி ஏன் அழுகின்றது? என்று கேட்டுக் கொண்டே குழந்தையைத் தூக்கி முத்தமிட்டுச் சமாதானம் செய்துகொண்டே தன் குடிசைக்குள் குழந்தையை எடுத்துச் சென்றாள்.

பீர்பால் அக்பரை நோக்கி பார்த்தீர்களா அரசே, கலைந்த தலைமுடி, ஒழுகும் மூக்கு, உடலெங்கும் மண்புழுதியுடன் தன் குழந்தை இருந்தாலும் அந்தத் தாய்க்கு அந்தக் குழந்தை பேரழகுதான் என்ன சொல்கிறீர்கள் என்றார்.

அக்பருக்கு அழகு என்பது உள்ளத்தில் அன்போடு பார்க்கும் பார்வையில் இருப்பது என்று தெளிவுபட புரிய வைத்தார் பீர்பால்.

ஆம், என்று ஆமோதித்து பரிசுகள் தந்து பீர்பாலைச் சிறப்பித்தார் அக்பர்.

**நீதி: ஒவ்வொரு தாய்க்கும் தன் குழந்தை அழகு.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்

**32**

ராஜராஜன் ஆட்சிக் காலத்துக்குப் பிறகு, சேர நாட்டைச் சோழர்கள் விடவேயில்லை.


காந்தளூர்ச் சாலையிலும் அதைச் சுற்றிய சேரர் பகுதிகளிலும் தொடர்ந்து சோழர்களுக்கும் சேரர்களுக்கும் சண்டை நடந்திருக்கிறது.

இதனாலேயே, காந்தளூர்ச்சாலையையொட்டி நடந்த நிகழ்வுகளை நூற்றாண்டுப்போர் என்று கேரள வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பு எழுதியுள்ளார்கள்.

சேரநாட்டு வெற்றிக்குப் பிறகு, சேர நாட்டில் திருநந்திக்கரை என்ற ஊரில் தம்முடைய பிறந்த நாளாகிய சதய நட்சத்திர நாள் தோறும் விழா கொண்டாட வேண்டும் என்று ராஜராஜன் ஆணை பிறப்பித்தார்.

அதாவது ஒரு சோழ மன்னனின் பிறந்த நாள் விழா சேரநாட்டில் கலிங்கத்துபரணியில் இந்த நிகழ்வு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ராஜராஜனுக்கு முன்பு இருமுடிச் சோழர்களாக இருந்தார்கள் சோழர்கள். காந்தளூர்ச்சாலை கல



திருநந்திக்கரை குகை

மறுத்தளி நிகழ்வுக்குப் பிறகு மூவேந்தர்களின் முடியும் அவர்கள் வசம் தான் இருந்தன. இதனால் மும்முடிச் சோழன் என்கிற பட்டம் ராஜராஜனுக்கு வழங்கப்பட்டது.

வெற்றிகள் குவியக் குவிய ஒரு விடயத்தில் மிகக்கவனம் எடுத்துக் கொண்டார் ராஜராஜன். நாம் இன்று இத்தனை வெற்றிகளைக் குவிக்கின்றோம்.

இந்த வெற்றிகள் அத்தனையும் காற்றோடு போய் விடக் கூடாது. எத்தனை வருடங்கள் ஆனாலும் இந்த வெற்றிகளை தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். ராஜராஜன் நாடு பிடிக்கும் ஆசையோடு காந்தளூர்ச்சாலையைத் தாக்கவில்லை என்பதை அறிய வேண்டும்.

இந்த நாட்டை இந்தக் காரணங்களுக்காகத் தான் வென்றேன் என்கிற தகவல்களை அவர்கள் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே இவை கல்வெட்டில் பொறிக்கப்பட வேண்டும். ஒரு வெற்றி கூட விடாமல் பதிவு செய்யப்பட வேண்டும். என் விருதுப் பெயர்களை மட்டுமல்லாமல் என் வெற்றிகளையும் கூடவே என் கல்வெட்டில் பொறிக்க வேண்டும்.

ராஜராஜனின் இந்த விருப்பம் ஆணையாக மாறியது. கல்வெட்டுகள் போர் ஏடுகளாக மாறின. பிறப்பு முதல் இறப்பு வரைக்குமான தமிழர்களின் வாழ்க்கையையும் சமுதாயத்தில் நிலவிய பழக்கவழக்கங்கள் பலவற்றையும் அறிந்து கொள்ளக் கல்வெட்டுக்கள் மிகவும் உதவி செய்கின்றன.

இதைப் பற்றிக் கொஞ்சம் விரிவாகவே முந்தைய அத்தியாயத்தில் பார்த்து விட்டோம். மன்னர்களின் பெயர்கள் கல்வெட்டுகளில் இருந்தாலும் சில சமயம் ஒரே பெயர்கள் பல மன்னர்களுக்கு இருந்து விடுகின்றன.

அப்படிப்பட்ட சமயங்களில் முதலாம் பராந்தகன், இரண்டாம் பராந்தகன் என்று வசதியாக வரலாற்றாசிரியர்கள் பிரித்து விடுவார்கள்.

ஆனால், கல்வெட்டுக்களில் இந்த வசதிகள் கிடையாது. முதலாம் ராஜராஜன், இரண்டாம் ராஜராஜன் ஆகிய இருவர் பெயர்களும் கல்வெட்டுகளில் ராஜராஜன் என்றே குறிப்பிடப்பட்டிருக்கும்.

பிறகு,யாரைப் பற்றிக் கல்வெட்டு கதை சொல்கிறது என்பதை எப்படி புரிந்து கொள்வது? அதற்குக் கல்வெட்டுக்களிலேயே விடையிருக்கிறது.

கல்வெட்டுக் காலத்தையும் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள மன்னர்களின் பெயர்களையும் அறிந்து கொள்ள நமக்கு மிகவும் பேருதவியாக இருப்பது மெய்கீர்த்தி.

(தொடரும்)

வெளியே இருக்கும் வறுமையைவிட மனதில் உள்ள வறுமையே அபாயமானது.
- டாக்டர் ராதாகிருஷ்ணன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என சிலப்பதிகாரம் போதித்து நிற்கிறது.

எங்கும் எதிலும் அறத்தைப் பாதுகாப்பதன் அவசியத்தைக் கூறுவதற்காக இளங்கோ அடிகள் அறம் கூற்றாகும் என்றார்.

அரசியல் பிழைத்தோர் என்று இளங்கோ அடிகள் சுட்டி நிற்பதற்குள் இருக்கக்கூடிய பேருண்மையை உணர்தல் அவசியம்.

அரசியல் என்பது பொதுமக்களைப் பிரதிநிதித்துவம் செய்வது. அரசியலில் இருந்து தான் நீதி, நியாயம், தர்மம் என்ற அனைத்தும் உற்பவமாகின்றன.

எனவே, அரசியல் ஒழுங்கற்றுப் போகுமாயின் அஃது மக்கள் சமூகத்தில் இருக்கக்கூடிய அத்தனை பண்பாட்டு விழுமியங்களையும் சிதைத்து விடும்.

அநீதி மேலோங்கும். அதர்மம் எழுந்தாடும். நன்மக்கள் துன்பப்படுவர். இஃது அழிவையும் அக்கிரமத்தையும் விளைவிக்கும்.

எனவேதான் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் எனச் சிலப்பதிகாரத்தினூடாக இளங்கோ அடிகள் வலியுறுத்தி நிற்கின்றார்.

இங்கு இளங்கோ அடிகள் மன்னராட்சியின் கால கட்டத்தில் நின்று இதனைக் கூறியிருந்தாலும் ஜனநாயக ஆட்சியிலும் இளங்கோ அடிகள் செப்பிய அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்ற தத்துவம் சாலப் பொருந்துகிறது.

ஆம், ஜனநாயக அரசியல் என்பது முடியாட்சிக்கு மாற்றுத் தீர்வாக, மாற்றுத் தலைமையாக அறிமுகப்படுத்தப்பட்டாலும் அங்கும் பொய், புரட்டு, விசமப் பிரசாரங்கள், மக்களைத் தவறாக வழிப்படுத்துகின்ற மோசங்கள், ஊழல்கள், இலஞ்சங்கள் என ஏகப்பட்ட அதர்ம காரியங்கள் நடந்தாகின்றன.

இவ்வாறு அதர்ம காரியங்கள் நடக்கின்ற போதிலும் அவை அரசியலில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்கம் போல நினைக்கப்படுவது தான் கொடுமையிலும் கொடுமை.

உண்மையில் தர்மம் என்பது அரசியலில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அவ்வாறு அரசியலில் அகிம்சையை, தர்மத்தை நிலை நிறுத்திய பெரியவர்களை இன்றும் நாம் நினைவுபடுத்துகின்றோம்.

ஆக, அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்ற விடயத்தை ஒவ்வொரு அரசியல்வாதியும் தம்முள் ஆழப்பதிவு செய்ய வேண்டும்.

அரசியல் என்றால் அங்கு தந்திரமே முதன்மையானது என்று எவர் நினைக்கின்றாரோ அவர் தனக்கான எதிர்கால அழிவைத் திட்டமிட்டு விட்டார் என்று பொருள் கொள்ளலாம்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலை ஒரு கணம் திரும்பிப் பாருங்கள். இந்த நாட்டின் பிரதமராகவும் மிகப் பழமை வாய்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் இருந்த ரணில் விக்கிரமசிங்க படுதோல்வி கண்டார்.

அதுமட்டுமன்றி ஐக்கிய தேசியக் கட்சி ஒட்டுமொத்தத் தோல்வியைச் சந்தித்தது. தேசியப் பட்டியலில் கிடைத்த ஒரு ஆசனம் இல்லையென்றால் ஐக்கிய தேசியக் கட்சியின் பெயர் அஸ்தமனமாகி இருக்கும்.

இவ்வாறு ஒரு பெரும் கட்சி கந்தறுந்து காவடி எடுக்குமளவுக்கு வருவதற்குக் காரணம் அந்தக் கட்சி சஜித் பிரேமதாஸவுக்குச் செய்த அநீதியும் தமிழ் மக்களுக்குச் செய்த துரோகமுமாகும்.

ஆக, ஐக்கிய தேசியக் கட்சியின் கதிகண்டு ஏனைய அரசியல்வாதிகள் தங்கள் கருமத்தை அறத்துடன் ஆற்ற முன்வர வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

## மன்னார் கடலில் 700 கிலோ எடையுள்ள மீன் கரையொதுங்கியது

(மன்னார்)

மன்னார் ஆதாம் பாலத்திற்கு உட்பட்ட தேசிய வனப் பூங்கா பகுதியில் கடற்பன்றி இனத்தைச் சேர்ந்த பாரிய மீன் சடலமாக கரையொதுங்கியுள்ளதை தொடர்ந்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு உடற்கூற்றுபரிசோதனை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த கடற்பன்றி இனமானது தற்போது அருகிவரும் பாலூட்டி மீன் இனத்தைச் சேர்ந்தது என்பதுடன் கரையொதுங்கிய கடற்பன்றி 3.3 மீற்றர் நீளமானதும் சுமார் 700 கிலோகிராம் எடை கொண்டதாகும்.

குறித்த கடற்பன்றியின் உடற்கூற்று பரிசோதனை அறிக்கை கிடைக்க பெற்ற பின்னர் குறித்த அறிக்கையானது மன்னார் நீதவான் நீதி மன்றிற்கு சமர்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா-285)

## வவுனியாவில் பட்டப்பகலில் மோட்டார் சைக்கிள் திருட்டு

(வவுனியா)

வவுனியா கற்குளி பகுதியில் பட்டப்பகலில் மோட்டார் சைக்கிளை திருடிச் சென்ற சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா கற்குளி பகுதியில் நேற்று முன்தினம் மாலை வீடொன்றிற்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த (BOXER MODEL NP H1-6704) மோட்டார் சைக்கிளை இனம் தெரியாத நபர்கள் திருடி சென்றுள்ளனர்.

வீடொன்றின் முன்னால் வீதி ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் வண்டியையே இனந் தெரியாத நபர்கள் திருடிச் சென்றுள்ளனர். இதனையடுத்து மோட்டார் வண்டியின் உரிமையாளர் சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

திருட்டு தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-299)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வராத்துப்பளை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா தொடர்பாகவும், நிர்வாக விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்காக நாளை செவ்வாய்க் கிழமை பி.ப 5.00 மணிக்கு பொதுக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளதாகவும், இக் கூட்டத்தில் திருவிழா உபயகாரர்கள், நிர்வாக பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தவறாது கலந்து கொள்ளு மாறும் ஆலய பரிபாலன சபை தலைவர் அறிவித்துள்ளார். (ஞா)

பாராளுமன்ற செயற்பாடு தொடங்கியவுடன்

## 19 ஆவது திருத்தம் தொடர்பில் முதலாவது கவனம் செலுத்தப்படும்

### மகிந்த அணியைச் சேர்ந்த நாலக தெரிவிப்பு

(கம்பஹா)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு கிடைக்கப் பெற்றுள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் மக்களின் முன்னேற்றத்திற்காகவும், நாட்டின் இறையாண்மை பாதுகாப்பிற்காகவும் பயன்படுத்தப் படும். அரசியலமைப்பின் 19வது திருத்தம் தொடர்பில் கவனம் செலுத்துவது 9வது பாராளுமன்றத்தின் முதலாவது செயற்பாடாக அமையும் என நாலக கொடஹேவா தெரிவித்தார்.

கம்பஹா நகரில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆட்சியாளர்களுக்கு அளவுக்கு மீறி அதிகாரம் கிடைக்கும் போது அரச நிர்வாகம் ஒருகட்டத்தில் சர்வாதிகார போக்கினை கொண்டதாக மாறிவிடும். இலங்கையிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீது நம்பிக்கை கொண்டு பெரும்பாலான மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு பெரும்பான்மை ஆதரவை வழங்கியுள்ளார்கள்.

சேறுப் பூசும் அரசியல் கலாசாரத்தை அரசியல்வாதிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். மக்களை ஏமாற்ற முடியாது. அரசியல்வாதிகளை காட்டிலும் புத்திசாலிகளாக இன்று மக்கள் உள்ளார்கள். நாட்டுக்கும், மக்களுக்கும் ஆற்றும் சேவைகளை முன்வையுங்கள். மக்கள் முழுமையான ஆதரவு வழங்குவார்கள்.

விருப்பு வாக்குமுறைமை இணக்கமாக செயற்படும் அரசியல்வாதிகளுக்கு இடையில் இறுதியில் முரண்பாட்டை தோற்றுவிக்கும். எமது தரப்பிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றன. ஆகவே தேர்தல் முறைமையிலும் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம் என்றார். (ஞா)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 11 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல்5 மணிவரை வவுனியா பிரதேசத்தில் பத்தினியார்மகிழங்குளம்கிராமம், கோவில்குளம் 10வது ஒழுங்கையிலிருந்து சிதம்பரபுரம் வரை, ஆண்டியப்புளியங்குளம், வாரிக்குட்டியூர் 4ஆம் வட்டாரம், கற்கடந்தகுளம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

வாழ்க்கையில் நீங்கள் அதிகம் பெற விரும்பினால் முதலில் நீங்கள் அதிகமாகக் கொடுங்கள்.
-ஸ்டோன்

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## நான் என்ற தத்துவமே நாம்



தண்ணீரே சமுத்திரம், ஆறு, ஏரி, குளம், குட்டை, மழை, மேகம் என்ற பல பெயர்களால் அழைக்கப்படுவது போல,

"நான் என்று சொல்லும் அறிவின் தத்துவமே - காந்த சக்தி அலை இயக்கமே - பல்வேறு உருவில், அதனதன் தன்மைக்கேற்ப இயக்கும், இயங்கும் சக்தியாகவும், உணரும் ஆற்றல் நிலையாகவும் இருக்கிறது.

ஆகையால், இந்த "நான்" என்ற தத்துவம் தான் - சக்திதான் - நாம் என்ற பலராக, அனேக கோடி சீவன்களாக, மனிதர்களாக, அறிவியக்கங்களாக இருக்கிறது.

உருவ அளவில் மனதுக்கு எல்லைகட்டிக் கொண்டு பல நாடுகளிலும் சிதறி வாழ்ந்து, தேசம், இனம், ஜாதி, மதம் என்னும் வேறுபாடுகளைக் கற்பித்துக் கொண்டு, அதனால் வாழ்க்கையில் பலவிதமான துன்பங்களையும் அனுபவித்துவிட்டோம். ஆழ்ந்து ஆராய்ந்த போது, அறிவின் தத்துவமாகிய ஆன்ம நிலையை அறிந்து விட்டோம். அந்நிலையில் அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்தோம். இந்த விரிந்த மனநிலையில் அனைவரும் வாழ வேண்டும்.

# இருபது-20 உலகக்கிண்ணம்-2021 இந்தியாவில் நடத்த ஐ.சி.சி. திட்டம்




2021 ஆம் ஆண்டு உலக இருபது- 20 கிரிக்கெட் போட்டி இந்தியாவில் நடத்தப்படும் என சர்வதேச கிரிக்கெட் சபையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

7 ஆவது உலக இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் தொடர்ந்து அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக இந்தப் போட்டி வேறுவழியின்றி ஒத்திவைக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டு உலக இருபது- 20 கிரிக்கெட் போட்டியை நடத்தும் உரிமத்தை இந்தியா பெற்றுள்ளது.

இந்தத் தொடரை நடத்தும் வாய்ப்பை தங்களுக்கு மாற்றித் தர வேண்டும் என அவுஸ்திரேலியா வலியுறுத்தியது.

ஆனால், 2021ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை நடத்தும் உரிமையை விட்டுக்கொடுக்க இந்திய கிரிக்கெட் சபைக்கு விருப்பம் இல்லை.

ஏனெனில், 2022 ஆம்ஆண்டில் உலக இருபது-20 கிரிக்கெட் போட்டியை நடத்தினால், அதற்கு அடுத்த ஆண்டு 50 ஓவர் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான ஏற்பாடுகளை செய்வது மிகவும் சிரமமாக இருக்கும் என்று இந்திய தரப்பில் கூறப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில் ஐ.சி.சி. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் காணொளி தொடர்பாடல் மூலம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தியா, அவுஸ்திரேலியா கிரிக்கெட் சபை நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். உலக இருபது- 20 கிரிக்கெட் போட்டி விவகாரத்தில் இந்தியா தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தது.

இதன் முடிவில் 2021 ஆம் ஆண்டு உலக இருபது- 20 போட்டியை திட்டமிட்டபடி இந்தியாவில் நடத்துவது என்றும், ஒத்திவைக்கப்பட்ட உலக இருபது- 20 போட்டியை 2022 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவில் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மகளிருக்கான 12 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி (50 ஓவர்) அடுத்த ஆண்டு பெப்ரவரி 6 ஆம் திகதி முதல் மார்ச் 7 ஆம் திகதி வரை நியூசிலாந்தில் நடத்தப்படவிருந்தது.

கொரோனா அபாயத்தால் இதற்கான தகுதி சுற்று முழுமை பெறாமல் ஒத்திவைக்கப்பட்ட நிலையில், இந்த உலகக் கிண்ணப் போட்டியையும் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி வரை ஒத்திவைப்பது என தீர்மானிக்கப்பட்டது.

இந்த தகவல்கள் ஐ.சி.சி. வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# உலகக் கிண்ணப் போட்டியில் விளையாட ஆர்வமாகவுள்ளேன்

## மிதாலிராஜ் தெரிவிப்பு



பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி ஓராண்டு தள்ளிவைக்கப்பட்டாலும், அந்த போட்டியில் விளையாட வேண்டும் என்பதில் ஆர்வமாக இருக்கிறேன் என மகளிர் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மிதாலிராஜ் தெரிவித்துள்ளார்.

12-வது பெண்கள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி (50 ஓவர்) அடுத்த ஆண்டு பெப்ரவரி 6ஆம் திகதி முதல் மார்ச் 7ஆம் திகதி வரை நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது.

இந்த போட்டிக்கு நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆபிரிக்கா, இந்தியா ஆகிய 5 அணிகள் தகுதி பெற்று இருந்தன. எஞ்சிய 3 இடத்துக்கான தகுதி சுற்று போட்டி இலங்கையில் நடக்க இருந்த நிலையில் கொரோனா அச்சத்தால் அந்த தகுதி சுற்று ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில் கொரோனாப் பரவல் அதிகரிப்பால் மகளிர் உலகக் கிண்ண போட்டியை 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை தள்ளிவைப்பதாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் அறிவித்தது.

இதை சுட்டிக்காட்டி அவுஸ்திரேலிய முன்னாள் வீராங்கனையும், வர்ணனையாளருமான லிசா தனது டுவிட்டர் பதிவில், 'அடுத்த ஆண்டு நடக்க இருந்த உலகக் கோப்பை போட்டிக்கு பிறகு ஓய்வு பெறலாம் என்று திட்டமிட்டு இருந்த மிதாலிராஜ், ஜுலன் கோஸ்வாமி ரேச்சல் ஹெய்ன்ஸ் போன்ற வீராங்கனைகள் இன்னும் ஒரு வருடம் காத்திருக்க வேண்டும்' என்று கருத்து தெரிவித்திருந்தார்.

இதற்கு மகளிர் இந்திய ஒரு நாள் போட்டி அணியின் தலைவர் மிதாலி ராஜ் பதிலளித்துள்ளார்.

அவர் டுவிட்டர் பதிவில், 'நிச்சயமாக உலகக்கோப்பை மீது எனது பார்வையை பதித்து இருக்கிறேன்.

எல்லா வகையான சிறிய காயங்களில் இருந்தும் மீண்டு முன்பை விட உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் புத்துணர்ச்சியுடனும், வலுவாகவும் இருக்கிறேன்.

2022ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டியில் விளையாடி கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற குறிக்கோளை எட்டுவதில் ஆர்வமாக இருக்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார். (4)

# டோனி மீது வெறுப்படைந்தேன்

## சொயிப் அக்தர்



கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வீட்டில் முடங்கியுள்ள கிரிக்கெட் வீரர்கள் சமூக வலைத்தளங்களில் பல்வேறு தகவல்களை பகிர்ந்து வருகின்றனர்.

அந்தவகையில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரரான சொயிப் அக்தர், தன்னுடைய யூ டியூப் சனலில் டோனியைப் பற்றிப் பேசியுள்ளார்.

அதில், 2006 ஆம் ஆண்டு பைசலாபாத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் தொடர்ச்சியாக 9 ஓவர்கள் பந்துவீசி வந்தேன். அப்போது அந்த இன்னிங்ஸில் டோனி சதம் அடித்தார்.

டோனி சதம் அடித்து முடித்தவுடன் நான் அவரை குறி வைத்தே பீமரை வீசினேன். பின்பு அதற்காக டோனியிடம் மன்னிப்பும் கேட்டேன்.

அப்போதுதான் என் கிரிக்கெட் வாழ்க்கையில் முதல் முறையாக ஒரு பட்ஸ்மனுக்கு வேண்டுமென்றே பீமரை வீசினேன்.

அதை நான் செய்திருக்கக் கூடாது. அதற்காக பின்பு நான் மிகவும் வருந்தினேன். அன்றைய போட்டியில் நான் எப்படி பந்து வீசினாலும் டோனி அடித்துக் கொண்டே இருந்தார். அத னால் நான் கொஞ்சம் வெறுப் படைந்தேன் என கூறினார். (4)

# பாகிஸ்தானை வீழ்த்தியது இங்கிலாந்து

கிறிஸ்வோக்ஸ், ஜோஸ் பட்லரின் பொறுப்பான ஆட்டத் தால் முதல் டெஸ்டில் பாகிஸ்தானை 3 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து வீழ்த்தியது.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் மான்செஸ்டரில் நடைபெற்றது.

முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் 326 ஓட்டங்களை குவித்தது. அதன்பின்னர், துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து முதல் இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதனால் 107 ஓட்டங்கள் முன்னிலையுடன் பாகிஸ்தான் தனது 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்தது. எனினும் நேற்று முன்தினம் 3ஆவது நாள் ஆட்டத்தின்போது இங்கிலாந்தின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் பாகிஸ்தானின் விக்கெட்டுகள் மளமளவென சரிந்தன.

இதனையடுத்து 3ஆவது நாள் ஆட்ட முடிவில் பாகிஸ்தான் 137 ஓட்டங்களை எடுப்பதற்குள் 8 விக்கெட்டுக்களை இழந்தது.

இந்நிலையில், 4ஆவது நாள் ஆட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி 2ஆவது இன்னிங்சில் 169 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனையடுத்து பாகிஸ்தான் முதல் இன்னிங்சில் 107 ஓட்டங்கள் அதிகம் பெற்றதால் ஒட்டுமொத்தமாக 276 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

இதன் பின்னர் 277 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் கிறிஸ்வோக்ஸ், ஜோஸ் பட்லர் ஜோடியின் பொறுப்பான ஆட்டத்தால், இங்கிலாந்து அணி 7 விக்கெட் இழப்புக்கு 277 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. (4)

# இலங்.மகளிர் கிரிக்கெட் அணிக்கு புதிய தலைமைப் பயிற்சியாளர்



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் லங்கா டி சில்வா இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் இடைக்கால தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மோசமான செயற்றிறன் காரணமாக தலைமைப் பயிற்சியாளர் பதவியிலிருந்து ஹர்ஷ டி சில்வா நீக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணிக்காக மூன்று டெஸ்ட் மற்றும் 11 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள லங்கா டி சில்வா, 2020ம் ஆண்டின் இறுதி வரை இந்தப் பதவியில் இருப்பார். (4)

## பாடசாலைகள்...

200 இற்கும் குறைவான மாணவர் களைக் கொண்ட பாடசாலைகளைத் தவிர, ஏனைய பாடசாலைகளை கட்டம் கட்டமாக ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

200 இற்கு மேற்பட்ட மாணவர்களை கொண்ட 2ஆம் நிலை பாடசாலைகளில் ஆரம்ப தர மாணவர்கள் வாரத்தில் ஒரு நாள் மட்டுமே பாடசாலைக்கு அழைக்கப்படுவர்.

தரம் 5 மாணவர்களுக்கு வாரத்தில் 5 நாட்களிலும் பாடசாலை நடத்தப்படும். எனினும் கற்றல் செயற்பாடுகள் இடம் பெறும் நேரத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும் போது சுகாதார வழிகாட்டுதல்களை அவசியமாக கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்யுமாறு அனைத்து அதிகாரிகளையும் கல்வி அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் 11ம், 12ம் மற்றும் 13ம் தர மாணவர்களுக்களுக்கான கல்வி நடவடிக்கைகள் கடந்த 27ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

பொதுத் தேர்தலை முன்னிட்டு அனைத்து பாடசாலைகளுக்கும் ஒரு வார காலம் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. (ஞா)

## கொள்ளையுடன்...

சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பிரதான சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பெருமளவு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயதிலகவின் வழிநடத்தலில் உப பொலிஸ் பரிசோதகர் ஆனந்தா தலைமையிலான பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் அவரிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் துவிச்சக்கர வண்டி 2, மின்விசிறி ஒன்று, தண்ணீர் பம்பி, கைத்தொலைபேசிகள் 18, ஐபாட் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கொள்ளையுடன் பலர் ஈடுபட்டு உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஞா-60)

## ஆசிரியர் நிய...

மாதங்களில் இந்த ஆசிரியர்களை நியமிக்கும் திட்டம் தாமதமானது என்று கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

க.பொ.த. சாதாரண தரத்தில் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கில பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களும் க.பொ.த உயர்தரத்துக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதில் இந்த திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

ஆசிரியர் வெற்றிடங்கள் குறித்த விபரங்களை வழங்குமாறு கல்வி அமைச்சு ஏற்கெனவே பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்திருந்தது.

அதன்படி குறிப்பிட்ட ஆசிரியர்கள் மாகாண பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவார்கள் என்று கல்வி அமைச்சின் அதிகாரி தெரிவித்தார். (ஞா)

## மொட்டுக் கட்சி...

நேற்று செய்திகள் வெளிவந்தன.

அந்த வகையில்,

- தோட்ட சமூகத்துடன் இணைந்த ஒரு கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள்.
- மேல் மாகாணத்தின் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு உறுப்பினர்கள்.
- கிழக்கு மாகாணத்தின் இரண்டு சிறுபான்மை கட்சிகளைச்சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள்.
- பொலநறுவையில் இருந்து ஒரு உறுப்பினர் ஆகியோர் அரசாங்கத்தில் சேர உள்ளனர்.

பொலநறுவையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த உறுப்பினர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பொதுஜன பெரமுனவுக்கு மாறியவராவார்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் புதிய அரசாங்கத்தை ஆதரிப்பதற்காக இவர்கள் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## மாவை சேனாதி...

மானம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி ஆசனம் அம்பாறை மாவட்டத்தின் கலையரசனுக்கு வழங்குவதாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தமிழரசுக் கட்சியின் செயலாளர் கி.துரைராஜசிங்கம் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்டக் கிளை உறுப்பினர்கள் யாழ்.மாட்டின் வீதியிலுள்ள தலைமை அலுவலகத்தில் நேற்றுக் காலை அவசரமாக கூடினர்.

இதன்போது தேசியப் பட்டியல் ஆசனம் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவிற்கே வழங்கப்பட வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஞா-18)

## தேசியப்பட்டியல்...

கட்சிகளான ரெலோ, புளொட் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளதாவது,

தேசியப் பட்டியல் ஆசன தெரிவு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கும் பங்காளிக் கட்சிகளாக புளொட மற்றும் ரெலோ கட்சிகளுக்கும் அறிவிக்கப்படாமலேயே முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஆசனம் அம்பாறை, நாவிதன் வெளி பிரதேச சபையின் தவிசாளர் தவராசா கலையரசனுக்கு வழங்கப்படுவதாக தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் நேற்றுக் காலை அறிவித்திருந்தார்.

இந்நிலையில், குறித்த முடிவு ஒட்டுமொத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் முடிவு இல்லையெனவும் தமக்கு அறிவிக்கப்படாமல் இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டமைக்கு கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் சித்தார்த்தன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த தேசியப் பட்டியல் ஆசனத்தை மாவை சேனாதிராஜாவுக்கு வழங்குவதே சிறப்பானது எனவும், இது குறித்து பரிந்துரைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஞா-18,285)

## எங்கோ இருந்த...

தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

ஆகவே, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியினர் இனிவரும் காலங்களில் மக்களின் எழுச்சிக்காக, புரட்சிக்காக பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்" இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்காக தேர்தல் காலங்களில் உழைத்த நண்பர்கள், நலன் விரும்பிகள், தொண்டர்கள் அனைவரையும் கௌரவிக்கும் முகமாக நடைபெற்று முடிந்த தேர்தலில் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றைய தினம் சந்தித்து தனது நன்றியைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுரேஷ் பிறேமச்சந்திரன், முன்னாள் வட மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், சி.சிவகுமார் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது,

வெகு விரைவிலே இந்த நாட்டிலே சர்வாதிகாரம் திளைக்கப் போகிறது. அதற்குரிய சகலவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்குரிய அத்திபாரம் இடப்பட்டு விட்டது. ஆனாலும் எமது உரிமைகளை நாம் கேட்டே தீருவோம்.

ஆனால் சிலர் நினைக்கிறார்கள் அதிகார பலம் அவர்களிடம் சென்றதன் பின்னர் கிடைப்பதைப் பெற்றுக் கொண்டு நாங்கள் வாயை மூடிக் கொண்டு இருந்தால் என்ன என்று நினைக்கின்றார்கள்.

சலுகையா? உரிமையா? என்ற போராட்டத்தில் இப்போது நாம் சலுகைகளுக்கு இடமளித்து விட்டோம். எங்கோ இருந்தவர்கள் வந்து இரவிரவாக மக்களுக்கு சலுகைகளைக் கொடுத்து இன்று மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

ஆகவே கட்சியின் வெற்றிக்காக உழைத்த அனைவரும் இனிவரும் காலங்களில் மக்களின் எழுச்சிக்காக, புரட்சிக்காக பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார். (ஞா)

## எந்த...

இது தொடர்பில் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொதுத் தேர்தலில் கிடைக்கப்பெற்றுள்ள மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்கின் றோம். அதற்காக ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாடுகள், நாட்டுக்கு ஒவ்வாத தீர் மானங்கள் மற்றும் அரசாங்கத்தின் அடாவடித்தனங்களை வேடிக்கை பார்க்கப் போவதில்லை. எதிர்க்கட்சி என்ற அந்தஸ்து எமக்கு கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் அடுத்த 5 ஆண்டுகளில் ஆட்சி பீடத்தை கைப் பற்றியே தீருவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் 24

தன நிதானய
திகதி - 2020.08.09
சீட்டிழுப்பு இலக்கம் - 300
C 07 16 32 66
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

மெகா பவர்
திகதி 09/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0576
D 26 35 46 50 72

மஹஜன சம்பத
திகதி 2020/08/09
சீட்டிழுப்பு இலக்கம் 4209
B 6 3 2 0 1 2
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 09-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2504
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 34 35 51 52

செவண
திகதி 09/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 285
Z 04 32 45 65

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 1005
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2020.08.09
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 59,146,425/-
வெற்றி இலக்கங்கள் 24 57 62 66 D

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1189
சீட்டிழுப்பு திகதி 09.08.2020 ஞாயிற்றுக்கிழமை
P 06 50 59 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,017,751.60
Web: www.dlb.lk

ராசி
வெற்றி வாரம் 2886 வர்ணம் ஊதா திகதி 09.08.2020
வெற்றி இலக்கங்கள் 06 17 37 48 துலாம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.2,295,703
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

K 09 15 16 76
சீட்டிழுப்பு வாரம் 609
மஞ்சள்
09.08 2020
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,922,070
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

பௌதிகவியல்
T.K.KAJAN B.Sc
077 653 1177
(3508)

இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற
இரத்தினசாமி அவர்கள்
ஜாதகம், கைரேகை, எண்கணிதம்
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை
மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில்
பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில்
தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும்.
முன்பதிவுக்கு: 071 574 8358, 071 392 9703, 076 682 7368
இல.101, Kandy Rd, jaffna (யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில்).
(3495)

மீண்டும்
வெளிநாடுகளுக்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை
அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த
எமது சேவை மீண்டும் வழமைபோல்
அனைத்து நாடுகளுக்கும்
100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
(C-5976)

அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

## எந்த ஒத்துழைப்பையும்...

சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சி என்ற வகையில் எமது பொறுப்பை சிறந்த முறையில்நிறைவேற்று வோம். தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் அறுதிப் பெரும்பான்மையை பெற்றுக் கொடுத்திருந் தாலும், அவர்களை வீழ்த்த முடியாது என்ற நிலைமை ஏற்படவில்லை. 2010 ஆம் ஆண்டு இவ்வாறே மக்கள் அரசாங்கத்திற்கு அறுதிப் பெரும்பான்மையை பெற்றுக் கொடுத்திருந்தனர். ஆனால் அவர்களால் நான்கு வருடங்களுக்கு மேலாக நிலைத்திருக்க முடியவில்லை.

நாட்டு மக்களுக்கும், நாட்டிற்கும் நன்மையை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு செயற்திட்டத்திற்கும் நாங்கள் ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்போம். 19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் எந்த ஒத்துழைப்பையும் பெற்றுக் கொடுக்க மாட்டோம். அரசியலமைப்பை திருத்துவது என்பதும் , அதனை நீக்குவது என்பதிலும் பாரிய மாற்றம் இருக்கின்றது.

19 ஆவது அரசியலமைப்பை பொருத்தமட்டில் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பன ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அதனால் அந்த திருத்தத்தை நீக்குவதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். ஆனால் நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் புதிய திருத்தங்கள் எதுவும் கொண்டுவரப்பட்டால் ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்போம் என்றார். (ஞா)

## வாழைக்குலை...

குறித்த சம்பவம் புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஐயனார் கோவிலுக்கு அண்மையிலுள்ள கள்ளியடி தோட்டப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை(08) இரவு நடந்துள்ளது. இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-18)

## 14 ஆம் திகதி...

பதவிப்பிரமாணம் செய்யவுள்ளதாக பிரதமரின் ஊடக செயலாளர் விஜயாநந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.இந்த நிகழ்வு வரலாற்று சிறப்புமிக்க கண்டி புனித தலதா மாளிகையின் பூமி யில் இடம்பெறவுள்ளது. (ஞா)

வேலை வாய்ப்பு
10 வெற்றிடங்கள்
18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தகைமைகள்:- க.பொ.த சாதாரண தரத்தில் 6 பாடங்கள் சித்தி.
முன் அனுபவம் அவசியமற்றது.
மாதாந்தம் 17,500/- ரூபாய்
வெளிமாவட்டத்தினரும் விண்ணப்பிக்கலாம்.
(3537)
தொடர்புகளுக்கு : 076 808 2241

A/L 2022 - தமிழ்
பா. பத்மநாதன்
B.A (HONS) (Tamil spl.)-1st class
M.A (TAMIL) - 1st calss
M.ED. (HONS) - 1st class
Dip. in Ed.
பிரிவு- II ஆரம்பம்
- C.C.A - சுன்னாகம் - 10.08.2020-5.00 P.M
- மொடேண்- சண்டிலிப்பாய் - 12.08.2020 - 5.00 P.M
- மகுடம் - உரும்பிராய் - 15-08-2020 -11.30 A.M
- சித்தி விநாயகர்-மல்லாகம் - 15.08.2020 - 1.00 P.M
(3519)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
வழமைபோல வெளிநாடுகளுக்கு
பொதிகளை எமக்கூடாக
அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-006)
0768226240

வாழ்த்துகின்றோம்

பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2020 இல்
தமிழ்த் தேசிய கூட்டமைப்பின்
சார்பில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு
வாக்கினைப் பெற்று வெற்றியீட்டிய
திரு. கௌரவ சிவஞானம் சிறீதரன்
ஐயா அவர்கட்கு எமது கிளி. நகர் வர்த்தக சமூக
அபிவிருத்திச் சங்கமும் சக வர்த்தகர்களும்
அவருக்கான வாழ்த்தினை
தெரிவித்து நிற்கின்றோம்.
அத்துடன் அவருக்கு
வாக்களித்து தமிழ் தேசியத்தின்
அடையாளத்தை
நிலை நிறுத்திய மக்களுக்கும்
எமது நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.



(3531)

வாழ்த்துவோர் :- கிளி. நகர் வர்த்தக
சமூக அபிவிருத்திச் சங்கம்
சக வர்த்தகர்கள்
கிளிநொச்சி நகர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.